அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

— Page —105 —

மலர் 4 இதழ் 3 விலை அ.4	நந்தன ௵ ஆனி ௴ ஜுன்—ஜுலை—1952	வருட சந்தா ரூ. 2-4-0

ACC. NO. 18581.



தக்ஷன் மானஸ பொய்கை தாமரை மேல் குழவி
உருவான பரமேஸ்வரியைப் பார்த்து
பரிவோடு எடுக்க முயல்கிருன்
(கந்தபுராணச் சித்திர விளக்கம்—37)

பொருளடக்கம்

				பக்கம்
1.	திருப்புகழ் அநுபவம்	(திருப்புகழ்மணி)	...	97
2.	அதிசயம் அநேகமுற்ற பழனி	(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை)	...	103
3.	கணபதி	(மொ. ஸ்ரீ. சீதாதேவிசெல்லம்)	...	106
4.	சேக்கிழார் செய்தது	(இளவழகனார்)	...	110
5.	என்ன புண்ணியம்	(தி. சு. மறைமலையார்)	...	116
6.	நமது கடமை	(சேஷாத்திரி ஐயங்கார்)	...	120
7.	பெறுவது நிச்சயம்	(வா. ராமலிங்கம் பிள்ளை)	...	124
8.	முருகம்மையார்	(ரசபதி)	...	128
9.	Cosmos and Trees	(Thiruppugal Mani)	...	140

கர வருஷ பன்னிரண்டு இதழ்களும் பயின்டு செய்யப்பட்டது ரூ. 3—6—0. தபால் செலவு அணா 6. வேண்டுவோர்கள் ரூ. 3—12—0 அனுப்பவும் வி. பி. இல்லை.

'அமிர்தவசனி'யின் முன்னேற்றத்தைக் கருதி ரூ. 50—0—0 நன்கொடையாக உதவும் அன்பார்ந்த நேயர்களுக்கு ஆயுள்வரை பத்திரிகை அனுப்பப்பெறும்.

அமிர்தவசனி சந்தா அறிக்கை

சித்திரை முதல் பங்குனி முடிய வருட சந்தா ரூ 2—4—0

நான்கு வருட சந்தா ரூ. 8—4—0

முன்னதாகச் சந்தா அனுப்புகிறவர்களுக்குமட்டும் பத்திரிகை அனுப்பப்படும்

அயல் நாடுகளுக்கு வருடசந்தா ரூ. 3—0—0.

4 வருட சந்தா ரூ. 11—0—0.

முன்னதாக அனுப்பவும். வி.பி. இல்லை.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

ஸ்ரீ அருணகிரிநாதர் 'திருப்புகழ் மாலை' (160 பாடல்) 0—8—0

பாராயணத் தோத்திரத் திரட்டு 0—1—6

கம்பர் தமிழ் அகராதி (940பக்கம்) 7—12—0

செலவுடன் 8—9—0

ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய கந்தர் அநுபூதி

(ரசபதி அவர்கள் விரிவுரையுடன்) 1—0—0

ஷை திருவகுப்புகள் ஷை ஷை 1—0—0

கிடைக்குமிடம்: அமிர்தவசனி காரியாலயம், 54, பந்தர் தெரு, சென்னை-1

அமிர்தவசனி

தெய்விக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 4	நந்தன ௵ ஆனி மீ ஜூன்—ஜூலை 1952	இதழ் 3

திருப்புகழ் அநுபவம்

(திருப்புகழ் மணி)

பகுதி 1.

ஆராய்ந்து பார்த்தால் மானிட வாழ்க்கையே ஓர் அநுபவம்தான். இந்த வாழ்க்கையில் துன்ப அநுபவமும் இன்ப அநுபவமும் நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு ஜீவனும் இன்பத்தை நாடுகின்றான். துன்பத்தை வெறுக்கின்றான். விருப்பும் வெறுப்புமாக, சந்தோஷமும் துக்கமுமாக ஆயுளை நிரப்பி விடுகின்றான். அவனுடைய அநுபவங்கள் எல்லாம் தன்னையே பற்றிய வினைகளாக மூள்கின்றன. நன்மையைப் பாராட்டி, பிறரை அப்புறப் படுத்தி, தனக்காகவும், தன்னிடத்தில் ஆசை கொண்ட மக்களுக்காகவும், இன்ப அநுபவங்களை சேர்க்கின்

அறிவாகமும் பெருக இடரான துந்தொலைய
'அருள்ஞான இன்பமது புரிவாயே

ருன். இவைகள் யாவும் நிலைத்து நிற்காமல், துன்பமாக கடையில் முடிகின்றன.

சிற்சில காலம் நின்று மறைகின்றன. இன்ப துன்பங்களைக் கருதாது எப்பொழுதும் நிலைத்து நிற்கக் கூடிய ஓர் ஆனந்தம் உண்டானால், அந்த ஆனந்தம் எங்கே தான் இருக்கின்றதோ? இதை மானிட வர்க்கம் இடைவிடாது தேடி, கண்டும் காணுமலும் மேலும் முயற்சித்து வருகின்றது.

ச்ருஷ்டி எனும் வேதப் பொருளின் விளையாட்டிலே, மானிடன் துன்பமற்று இன்பத்திலேயே வாழ்ந்திடலாம். பேரின்பமே தன் மயமாகக் கொண்ட வேதப் பொருளின் விளையாட்டில் மானிடனும் கலந்துகொள்வா னயின், பேரின்ப அநுபவத்தையே நுகர்ந்திடலாம்; அந்த விளையாட்டைத் தெளிவுற மானிட மக்களுக்கு அப்போதைக் கப்போது அநேக மஹான்கள் அவதரித்து விளக்கி இருக்கின்றார்கள். திருப்புகழ்ப் பாடல்கள், சுமார் 400 வருஷங்களுக்கு முன்பாக, முள்ளன்றம் எனும் கிராமத்தில் தோன்றிய ஒரு அவதார புருஷரான ஸ்ரீ அருணகிரியார் முகமாக ஏற்பட்ட ஓர் பேரின்ப வெள்ளம்; இன்பம், துன்பம், ஸுகம், துக்கம் இவைகளை ஒழித்து பேரின்பத்தில் திளைக்க உதவும் பெருந்த உபதேச நூல்.

பகுதி 2

மற்றைய ஜீவராசிகள் போல் அல்லாது மானிடன், மனம், சிந்தை, புத்தி, அறிவு என்று

செந்தமிழ் நாளுமோதி உய்ந்திட ஞானமுறு
செங்கனி வாயில் ஓர் சொல் அருள்வாயே

சொல்லப்பட்ட ஓர் பெரிய தத்துவத்தைப் பெற்றிருக்கின்றான். நிகழ்ச்சியின் உணர்ச்சியை மாத்திரமல்லாது, இறந்த காலத்தையும் தன் மனோ ராஜ்யத்தில் கொண்டு வந்து நிறுத்தி, பல துக்கங்களையும், போலி இன்பங்களையும் நுகர்கின்றான். ஆனால் அவனுடைய அநுபவம் எல்லாம், நிகழ்ச்சியிலே தான் நிற்கின்றது. நிகழ்ச்சியிலே எப்பொழுதும் இன்பத்தை நாட்டி விட்டால், துன்பமில்லாத வாழ்வை அடைந்திடலாம். இது கைகூடுவதற்கு துன்பம் கலவாத இன்பப் பொருள் ஒன்றை தேடிக் கண்டு கொண்ட முனிவர்கள், ஞானிகள், உலகிற்கு உபதேசித்துள்ளார்கள். அவர்களிற் சிறந்த ஒருவர் ஸ்ரீ அருணகிரி தேவராவர். இன்பப் பொருள் தெய்வம் என்றும், அந்த இன்பப் பொருளை மனதில் இருத்திப் போற்றினால், பேரின்பம் மனத்தில் நிரந்தரமாய்க் குடிகொள்ளும் என்றும், அந்த ஒப்பற்ற தெய்வம் முருகனே என்றும் உபதேசிக்கின்றார். மனதில் ஆண்டவனை இருத்தும் வகை, அவன் புகழைப் பாடும் வகையாம். பல ஆயிரம் திருப்புகழ் பாடி, முருகன் எனும் பேரின்பத்தை மக்கள் அடைய வழி காட்டினார் ஸ்ரீ அருணகிரியார்.

மாணிடன் உடல் அவன் சிந்தை வசம். அவன் எப்படியெல்லாம் ஏவுகின்றானோ அவ்வித மெல்லாம், உடலில் ஆற்றல் உள்ள அளவும் உடல் வசப்பட்டு ஆடுகின்றது. உடல் எனும் தத்துவம் சிந்தையின் அடிமை. இந்தச் சிந்தையை ஈசனுக்கடிமை

கடனுன தபய மடிமையு னடிமை
• கடுகியு னடிகள் தருவாயே

யாக்கி ஈசனிடம் ஒப்புவித்துவிட்டால், மானிடன், பேரின்பம் எனும் வாழ்க்கையை, பெரு வாழ்வை அடைவதற்கு ஐயமில்லை என்று உபதேசிக்கின்றார். அழியாத இன்ப நிலை வேண்டின் பேரானந்தப் பொருளாம் முருகனை சிந்தையில் வைம்மின்! இவ் வழியே ஆனந்த வாழ்க்கைக்கு எளிய வழி. இத்தத் துறையில் ஸித்திபெற திருப்புகழ்ப் பாராயணம் ஒரு சிறந்த அப்யாஸம்.

முருகன் கருணையே உருவெடுத்து ஸ்ரீ அருண கிரியார் வாயிலாக உலகத்துக்கீன்ற பெரும் பக்தி நூல், அனுபூதி நிறைந்த ஞான நூல் திருப்புகழ்.

பகுதி 3

திருப்புகழ் பாடிப் பயன்பெற அடிப்படையா யுள்ள லக்ஷணங்கள் சிலவற்றைக் கவனிப்போம். முதன்மையாக, தெய்வம் ஒன்றே ஒன்றுதான் என்கின்ற பூர்ண நம்பிக்கை வேண்டும். திருப்புகழ் பாட விரும்பும் அடியார்க்கு இந்த நம்பிக்கையை ஆண்டவன் தானே அருள்கிறார். தெய்வத்தில் நம் பிக்கையுடைய ஆஸ்திகர்கள், தெய்வத்தைத் திருப் புகழால் போற்றியே நிற்பார்கள். பழைய வினைக ளால் துன்புறும் மனம், தனிக் கொடி போல் பற்று வதற்கு நிலைத்த பொருள் அகப்படாது வாடி வெந்து அலைகின்றது. இக் கொடியை முருகன் எனும் தெய்வ மஹா விருக்ஷத்தில் ஏற்றிவிட்டால், அழி யாத மஹா விருக்ஷத்தைப் பற்றிப் பற்றிச் சுற்றிச் சுற்றிக் கட்டி அணைத்தும், தன்னுடன் பிணைத்தும்,

---

அறிய அறிய அறியாத அடிகள் அறிய அடியேனும்
அறிவுள் அறியும் அறிவூற அருள்வாயே

விருக்ஷமும் கொடியும் ஒன்றாய் ஏகமாய் விளங்கும். அப்பொழுது விருக்ஷத்தின் பலமும், பண்பும், அதைச் சார்ந்து ஒன்றிய கொடியின் பலமும், பண்புமாக ஏற்படுகிறது. மேலும் பற்றிச் சுற்றிய மஹா விருக்ஷம், தெய்வீகப் பேரானந்த ஸ்வரூப மாதலால், பற்றிய கொடியும், துன்பம் களைந்த பேரின்ப நிலையில் வேதப் பொருளுடன் விளையாடும் நிலையை அடைகின்றது. இப்படி கொடியை மஹா விருக்ஷத்துடன் பிணைத்துக் கட்டுவதற்குப் பசையோ, கயிறோ வேறு யாதாமொரு உபாயத்தை எங்கே பெறுவது என்று கேட்போருக்கு, ஸ்ரீ அருண கிரிநாதர் உபதேசிப்பது, 'இதோ முருகன் கருணையினால் ஏற்பட்ட திருப்புகழ் எனும் நூல் கொண்டு, சலித்து சலித்துத் தள்ளாடி வாடும் மனக் கொடியை முருகன் சரணார விந்தத்திலே கட்டி விடலாம்' என்பதுதான். முருகனை இவ்விதம் பற்றினர் பற்று அற்றவர்; அன்புற்றவர்; எமபற்றுரர். யிடியர் களால் உலகப் பற்று அற்றால்தான் முருகப் பற்று கைகூடும். முருகப் பற்று கை கூடினால் முருகனே அவர்தமைப் பற்றி ஆள்வான்; பழ வினை பறந்து விடும்; ப்ராரப்தம் தீர்ந்துவிடும்; பேரின்பம் முதிர்ந்து விடும். பிறப்பெனும் பேத உணர்ச்சி அற்றுவிடும்; பேத உணர்ச்சி யின்றி சும்மா இருக்கும் சுகத்தை அடைவார்கள்; எல்லாம் ஒன்றெனும் உணர்ச்சியில் கூடுவார்கள்; இப்பெரும் பேற்றை அடைய உதவும் நூல் திருப்புகழ் ஆகும்.

---

* ஒருகால் முருகா பரம குமரா
உயிர்கா வெனவோ தருன்தாராய்

எந்த ரூபத்தில் ஆண்டவனை உபாசித்தாலும் அந்த ரூபத்தில் வந்து அருள் புரியும் தெய்வம், பூர்ணம் என்று சொல்லப்பட்ட ஞானத்தைப் போதித்து விடுகின்றது. அருணகிரியார்க்குக் கண்டதெல்லாம் முருகன். தாயுமானுர்க்குக் கண்டதெல்லாம் மோன உரு தக்ஷிணாமூர்த்தி. வாலிக்கு ஆவிபோம் வேளை யில் ஞானக் கண்ணைத் திறந்துவிட்டார் ராமர். உலகம், உயிர், உணர்ச்சி யெலாம் ராமனுகக் கண் டான் வாலி. சிவவாக்கியரும் ராமன் இல்லாத இடம் எங்கு? என்று கேட்கின்றார். ப்ரஹ்லாதன் நாரா யணனை ஜகத் முழுதும் கண்டான். விண்ணிலும் மண்ணிலும் தண்ணுளும் எங்குமாகக் கண்டார் கடல் கடந்த மாயனை சிவவாக்கியர்; ஆகவே, ஈசனை உள்ளும் புறத்தும் காண்பவர், பேரானந்தப் பொருளை, ப்ரம்மஸ்வரூபத்தை எங்குமாய் அநுபவிக் கின்றார்கள். இந்த தெய்வாநுபவம் கிடைப்பதற்கு நம்மைப் பண்படுத்தும் கருவி திருப்புகழ் எனும் நூல்தான். எங்கும் நிறைந்த தெய்வத்தை, அருப மாய் இருந்து உயிருக்கு ஆருயிராய் நின்ற தெய் வத்தை, ஆறுமுகங் கொண்ட முருகனை பாவித்து, முருகன் செய்த உபதேச வழிகளையும், பேரானந்த அநுபவத்தின் மாக்ஷியையும், உள்ளெழுந்த பேரின்ப வெள்ளத்தையும் திருப்புகழாகப் பார்க் கின்றோம். ஒவ்வொரு திருப்புகழும் அக்ஷரக் கூட்டில் அடைத்த பேரின்ப வெள்ளமாகும்.

தாரிணைகள் உற்று மேவிய பதத்தில்
வாழ்வொடு சிறக்க அருள்வாயே

அதிசயம் அநேகமுற்ற பழநி (7)

திருப்புகழ் சதுர் டே.தெ. இராமலிங்கம் பிள்ளை B. A., B. T.,

(40 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'ஓதுவாருளந் தெளிவிக்கும் உத்தம மந்திரமான பழநித் திருநாமத்தைக் கொண்ட மலைக்கு, வேறு பல பெயர்களும் இதன் சிறப்பை விளக்க எழுந்தன. இவற்றுள் சித்தன் வாழ்வு, சிவகிரி, ஞான மலை என்பன சில.

சித்தன் வாழ்வு:—

சித்தன் வாழ்வு என்ற திருநாமம், அருந்தமிழ் அன்னையாகிய அவ்வைப் பிராட்டியின் அமுத வாக்கில்

……"சித்தன் வாழ்வு
இல்லந் தோறு மூன்றெரி யுடைத்து" எனப் பயின்றுள்ளது. பழநி மலை சித்தன் வாழ்வாவது எங்ஙனம்?

செந்தமிழ் நாட்டில் வித்தகச் சித்தர் பலர் விளங்கி யிருந்தனர். சித்தர், சித்த மொருக்கிய மெய்த் தவத்தால் அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் (அணுப்போலாதல், மகத்துவமாதல், தன்னுடல் கண்டித்தலின்றி, பிறவற்றை யுருவ வல்லனாதல், இலகுத்துவமாதல், வேண்டுவ பெறுதல், நிறையுளனாதல், ஆட்சி யுளனாதல், எல்லாந் தன்வசமாக்கல்) என்ற எண்வகைச் சித்திகளும் எய்தினராவர். இன்னார் காயம தழிவின்றி, ஆயிரக் கணக்கான ஆண்டுகள் அவனியில் வாழ்ந்திருந்தனர். திருமூல நாதர் மூவாயிரமாண்டுகள் வாழ்ந்து, மூவாயிரந் தமிழ்ப் பாடல்களியற்றினமை காண்க. இவர்கள் பல்வேறு மூலிகைகளின் வகை யறிந்து, உடலுறு நோய் தீர்த்து உறுதிதரும் மருத்துவராயும், ஞான நூற்களியற்ற வல்லுநராயு மிருந்தனர். இவர்களால் வழிபட்ட பல தலங்கள், விசேட அருட் பொலிவோடு விளங்குதல் காணலாகும்.

· கொடியனேனை யோதாத குதலையேனை நாடாத
குருடனேனை நீயாள்வ தொருநாளே.

அண்ணாமலை — இடைக்காட்டுச் சித்தர்
அரங்கம் — சட்டமுனி
அனந்த சயனம் — அகத்தியர்
ஆரூர் — கமலமுனி
எட்டிகுடி — வால்மீகி
எண்கண் — பாதசயர்
கருவூர் — கருவூர்த்தேவர், கோரக் காதர்
சிதம்பரம் — திருமூலநாதர்
சிவசங்கரன் கோவில் — பாம்பாட்டிச் சித்தர்
பரங்குன்றம் — மச்சமுனி
பழனி — போகர்
மதுரை — சுந்தரானந்த தேவர்
மாயூரம் (மாயவரம்) — குதம்பைச் சித்தர்
வேங்கடம் — கொங்கணமுனி
வைத்தீசுவரன் கோவில் — தன்வந்திரி

இவ்வோரன்ன பிற தலங்களில் பல்வேறு சித்தர்கள் சிறப்பொடு பூசித்தனரென்று பேரறிஞர் J. M. சோமசுந்தரம் பிள்ளை B. A., B. L., அவர்கள் குறித்துள்ளனர். சித்தர்கள் மலிந்த தொன்மையால், சித்தன் வாழ்வு என்ற பெயர் ஏற்பட்டதென்ப. ஆனால் சித்தரெல்லாந் தொழுதேத்த, அவர் தம் சித்த நீங்கா துறையும் ஞான சித்தன், முருகனே ஆவன்.

"வெற்றியுள்ள குறவர்கள் பெற்ற கொடிக்கு மிக மகிழ் வித்தக சித்த"

"செச்சை புலாவு பதத்தின மெய்த்தவர் வாழ்வு பெறத் தரு சித்த ! விசாக"

என்று சில மெத்திய சித்தப்ர சித்தரான அருணகிரியார், வேலன் வாய்த்த திருப்புகழில் கூறி யருளியதும் உன்னுக. மேலும், செவ்வேள் பரம்பரை, சித்தர் பரம்பரையே. கந்தனாதனது தந்தையான சோமசுந்தரர், மதுரையில் எல்லாம்

ஞானவுணர் வற்றி நானெழு பிறப்பும்
நாடி நரகத்தில் விழுவரோ.

வல்ல சித்தராய் எழுந்தருளி வந்து, கல்லானைக்குக் கரும்பருத்தியதும், பூவணத்தே பூ மணக்கும் நறுங் கூந்தல் பொன்னனையாள் (என்ற தாசி) தம் பொருட்டால், சித்த உருக்கொண்டெய்தி இரசவாதம் செய்த மாண்பும் திருவிளையாடல் புராணத்தில் சிறக்கக் காணலாம். சித்தரான சிவனார் திரு மைந்தர், பரம் பரைச் சித்தன் என்பது தவறில்லை யல்லவா?

சித்தர் தலைவனும், சித்தர் மகனும், எல்லாச் சித்தியும் அருள்பவனுமுள்ள செவ்வேட் பரமனது இருக்கை, 'சித்தன் வாழ்வு' எனப் பெயர் ஏற்றது என்க.

சித்தர் — சித்த விருத்தியைச் செயித்த முனிவரர் (ஜிதேந்திரியர்) என்று பொருள் கொள்வாருமுளர். (ஜித்— to Conqur, வெல்லுதல் என்று பொருள்படும் வடசொல்) அத்ரேல், அகத்தியர், புலத்தியர் முதலிய தவத்தான யோகியர் தொழும் சித்தன் முருகன் இருக்கை என்று பொருள் கொள்ளலுமாம்.

சிவகிரி :—

பழநி மலையைச் சிவகிரி, சிவவெற்பு, சிவமலை என்று நம் அருணகிரியார் பாடியுள்ளார். சிவனார் அமிசமாதலின் இம் மலை சிவகிரி எனப்படும். இதனை அடுத்துத் தேவியின் கூறான சத்திகிரியும் உள்ளது. இவ்விரு மலைகளும் சிவசத்திகளின் அமிசமென்று சிவனார்,

"சிவம் சத்தி - எனும் பேர் பெற்ற அரிய நன்முடி இரண்டாய் அமர்குவம் உமையும் யாமும்" என்று, அகத்தியர்க்கு அருளியதாக பழநித் தலபுராணம் கூறுவதும் நோக்கத் தக்கது. பழநியம் பதியில், சத்திகிரி சிவகிரியை அடுத்திருந்தாலும், கந்தவேள், இடும்பனுக்கு அருள் செய்யும்போது சிவகிரிமீது இருந்தே அருள் புரிந்தமையின் அச்சிறப்புப் பெயரே வழங்கிற்று.

" பழநிச் சிவகிரி மீதினிலே வளர் — பெருமானே "

(திருப்புகழ்)

பத்தி யுடனுருகி நித்த முனதடிகள்
பற்று மருள் நினைவு தருவாயே.

" அருள் சேர் பழநிச் சிவகிரி வாழ்
ஐயா வருக வருகவே "

(பழநிப் பிள்ளைத் தமிழ்)

ஞானமலை :—

ஞானந்தா னுருவாகிய நாயகனை முருகன், ஞான நெஞ்சினர் நவின்றேத்த ஞானதண்டாயுத பாணியாய் எழுந்தருளி, ஞானப் பழமுதவும் மலையை ஞானமலை என்று வழங்குதலும் இயல்பே.

' ஞானமலை பழநி நாயகமே என்னுடைய
ஊனை மலப் பிறவி ஓய்ந்திடுவ தெக்காலம்

எனவே, பழநி, சித்தங் கலங்கா மெய்த்தவர் சித்தத் துறைபவனும், சிவசித்தர் மகனும், போகர் போன்ற வித்தகச் சித்தர் விரும்பித் துதிக்கும் ஞானச் சித்தன் வாழ்வாகவும், பவ மகற்றும் சிவகிரி யாகவும், அஞ்ஞான மகல்விக்கும் மெய்ஞ்ஞான மலையாகவும் விளங்குகிறது என்றறிந்தோம்

(தொடரும்)

கணபதி

மோ. ஸ்ரீ. சீதாதேவி செல்லம்

முத்கல புராணத்தில் கணபதிப் பெருமானுக்கு முப்பத் திரண்டு உருவ பேதங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சித்தி விநாயகர், சத்திய விநாயகர், சோர கணபதி, மகா கணேசர், ஹேரம்ப விநாயகர், ஹாரித்ர கணேசர், உச்சிஷ்ட கணபதி முதலிய மூர்த்தங்கள் முக்கியமானவை.

நாம் ஜபங்கள் செய்யும்போது மாலையின் மணிகளைக் கணக்கிடுகிறோ மன்றோ? கணக்கிடும்போது, மறதியாலோ அலட்சியத்தாலோ கணக்கை விட்டுவிட்டால், அது பொய்க் கணக்குத் தானே! அதைக் கவனித்து ஆளைக் கையும் களவுமாகப் பிடித்து விடுவாராம் சோர கணபதி!

மயிலேறி யன்று நொடிபோதி லண்டம் வலமாகவந்த குமரேசா!
தெளிய மோக்ஷத்தை யென்று அருள்வாயே.

சித்தி விநாயகரைப் பற்றி மகாபாரதத்தில் தர்மபுத்திருக்குக் கிருஷ்ண பகவான் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார். குருக்ஷேத்திரத்தில் கௌரவ, பாண்டவர்கள் பாசறை கட்டிப் புகுந்து விட்டார்கள். யுத்த சன்னாகங்கள் தொடங்கிவிட்டன. எந்தத் தெய்வம் நாம் நினைத்த வரத்தை அளிக்கும்? என்று யுதிஷ்டிரர் கிருஷ்ண பகவானைக் கேட்டார். அவர் பின் வரும் பூஜை முறையைச் சொன்னார். 'நாம் நினைத்த வரத்தை உடனே அளிப்பவர் சித்தி விநாயகர். அவருக்குப் பத்திரிகள் இருபத்தொன்றும், இலை அறுகும் பிரியமானவை. இவற்றால், பொன்னால் செய்த கணேச விக்கிரகத்தைப் பூஜித்து, அதைப் பிராமணர் ஒருவருக்குத் தானம் செய்து விடவேண்டும். எந்தப் பூஜைக்கும் முன் சித்தி விநாயகரைப் பூஜிக்கவேண்டும். கணேச பூஜையால் உலக மாதாவாகிய சண்டிகாதேவி திருப்தி அடைகிறாள். விநாயக சதுர்த்தியன்று கணேச பூஜை செய்வதால், கைலாசத்தில் இருக்கும் தேவதைகள் எல்லோரும் சந்தோஷம் அடைவார்கள். பராசர மகரிஷியின் சாபத்தால் அன்று சந்திரனைப் பார்க்கக் கூடாது' என்று கிருஷ்ணபகவான் சொல்லியிருக்கிறார். தவறிப் பார்த்தவர்கள், 'சிங்கம் பிரசேனனைக் கொன்றது, ஜாம்பவான் சிங்கத்தைக் கொன்றார்' என்று சொன்னால் தோஷ பரிகாரம் ஆய்விடும்.

'கண' என்னும் சொல் வாக்கின் முப்பதாவது பெயர். அதனால் கணபதி, அஷ்டோத்தர சதங்களில் வாக்கின் அதிஷ்டான தேவதையாகவும், ஒலியின் அந்தர்யாமியாகவும் இருக்கிறார்.

கணேச மந்த்ர த்ரஷ்டாவைத் தந்திர நூல்கள் கணகர்ஷி என்று சொல்லுகின்றன. கணகர்ஷி குங்குமம்போல் சிவந்தவன்; முக்கண்ணன்; பானைவயிறன்; கையில் ஒற்றைத் தந்தத்தையும் அங்குசத்தையும் தரித்தவன். வக்ரதுண்டன், ஏக தந்தன், லம்போதரன், மகோதரன், கஜானனன், விகடன் ஆகியோர் இவருடைய பரிவாரங்கள்.

அருணை நகர்தனி லழகுடன் மருவிய பெருமானே
பவனி தனையது தினதினை யெனஅருள் பகர்வாயே.

மகா கணேச மந்திரத்துக்கு முக்கியமான அக்ஷரங்கள் இருபத்தொன்று. ஆகையால் கணபதிக்கு இருபத்தொரு பத்திரி, இருபத்தொரு கொழுக்கட்டைகள் பிரியமானவை. அந்தக் கணக்கிலேயே அவரைப் பூஜை செய்ய வேண்டும்.

சில நூல்களில் மகாகணேசனையும் ஹேரம்பனையும் ஒரே உருவமென்று சொல்லுகின்றன. ஹேரம்பன் பொன்னார் மேனியன். முக்கண்ணன். சிங்கவாகனன். ஒரு கை அபயகரம். ஒற்றைக் கொம்பு, கோடரி, ஜபமாலை, கதை, அங்குசம், திரிசூலம் ஆகியவை இவருடைய ஆயுதங்கள். விக்ன, விநாயக, சூர, வீர, வரத, யானைமுக, ஏக தந்தர்கள் இவருடைய ஏவலாளர்கள். ஏரம்பனுடைய துதிக்கை நேராக நீண்டு நுனியில் இடப்புறமாகவோ, வலப்புறமாகவோ வளைந்திருக்கும். பஞ்சமுக விநாயகரைப் பற்றியும், சில்ப ரத்னமும் முத்கல புராணமும் சொல்லுகின்றன. பெங்களூரில் குமார சைலத் (பசவன் குடி)தில் இருக்கும் விநாயகருக்குப் பஞ்ச முகங்கள் இருக்கின்றன.

உச்சிஷ்ட கணபதி தேவதைகளின் எச்சிலை உண்பவர்.

விநாயக சதுர்த்தியன்று அவர் ஹஸ்த நக்ஷத்திரத்தில் சேர்ந்திருப்பதாக வான சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

ருக் வேதத்தில் மந்திரம் ஒன்று இருக்கிறது; அதன் பொருள்: சூரியோதயத்துக்குமுன் எந்த நக்ஷத்திரம் தோன்றுமோ, அன்று அந்த நக்ஷத்திரத்தின் அதி தேவதையை நாம் முதலில் பூஜிக்க வேண்டும். விநாயக சதுர்த்தியன்று விக்னேச்வர நக்ஷத்திரம் நமக்குத் தெரிகிறது. மறுநாள் ரிஷி பஞ்சமி. அந்த மாதம் ஆரம்ப முதல் இந்த நக்ஷத்திரம் சப்த ரிஷிகளை அடுத்தே இருக்கும். விநாயக சதுர்த்தியன்று விடியற் காலையில் தோன்றிய நக்ஷத்திரம் வருஷக் கடைசியில் கிழக்கே தோன்றும். அஸ்ஸாமைச் சார்ந்த காமரூபத்தில் அன்றைக்கு விக்னேச்வர பூஜை செய்யும் வழக்கம் இப்பொழுதும் இருக்கிறது. இது ருக்வேத மந்திரத்தை அநுசரித்துச் செய்யும் பூஜையே.

சிவனார் திருப்புகழை என்னுவி னிற்புகழ
சிவஞான சித்திதனை அருள்வாயே.

சாந்திரமான பஞ்சாங்கங்களில், மாக சுத்த சதுர்த்தியில் விக்னேச்வர பூஜை என்று போடுவது உண்டு (தை மாதக் கடைசி.) வருஷக் கடைசியில் நம் கண்ணுக்குத் தோன்றும் விநாயக நக்ஷத்திரம், மாக சுத்த சதுர்த்தியன்றே உதயமாய் விடுகிறது. அதனாலேயே பிரசித்திபெற்ற வான சாஸ்திரியாகிய கண்ணுப்பிள்ளை அவர்கள், இம் மாதத்தில் கணேச சதுர்த்தி என்று நிர்ணயித்தாராம். இப்படிக் கணேச பூஜை பல மாதங்களில் வருகிறது.

சங்கராச்சாரியார்காலத்துக்குப்பின் சூரிய, சந்திர சக்தி, சிவ, சுப்பிரமண்ய, கணேச என்ற ஷண்மத சம்பிரதாயம் தோன்றியது. காணாபத்தியர்கள் கணபதியைச் சிவபெருமானினும் அதிகமாகப் பாவித்து அவருக்கு ஐந்து முகங்களையும் முக்கண்களையும் கற்பனை செய்தார்கள். விநாயகரைச் சிவபெருமானுடைய ஆகாச சக்தி என்று பாவித்தார்கள். கணேசரை வழிபடுவதற்கு ஆறு சம்பிரதாயங்கள் உண்டு. முதலாக வருபவர்கள் மகாகணபதி உபாசகர்கள். இவர்கள் வாம மார்க்கமாக ஆராதிப்பவர்கள். சந்தான, நவநீத, ஸ்வர்ண கணபதி மூர்த்திகளை உபாசிப்பது சிறந்த விதிக்கு உட்பட்ட முறை. காணாபத்தியர்கள் கணபதியின் மூலமாகவே எல்லாத் தேவதைகளையும் வணங்குகிறார்கள்.

“ஓம் லம் நமஸ்தே கணபதயே த்வமேவ ப்ரத்யக்ஷம் தத்வமஸி; த்வமேவ கேவலம் கர்த்தாஸி, த்வமேவ கேவலம் தர்மாஸி, த்வமேவ கேவலம் ஹர்த்தாஸி, த்வமேவ கேவலம் கல்விதம் ப்ரம்மாஸி, த்வமேவ ஸாக்ஷாத் ஆத்மாஸி நித்யம்.” இதனால்கணபதியை வசு, ருத்திர, ஆதித்திய மயமான பரப்பிரம்மாமகவும் தர்கள் வணங்குகிறார்கள் என்று தெரிகிறது.

கணபதி உபநிஷத்தின் ஒரு சுலோகமும் இந்தக் கொள்கையை உறுதிப்படுத்துகிறது

“த்வம் ப்ரம்ம த்வம் விஷ்ணு த்வம்
ருத்ரத்வம் இந்த்ர த்வம் அக்னித்வம்
வாயுத்வம் ஸூர்யத்வம் சந்த்ரத்வம்
ப்ரம்மா பூர்புவ ஸ்வ ஓம்.”

கனகமியற்றித் திரிந்து துவளு மேனைச் சற்றறிந்து
கவலை யொழித்தற் கிரங்கி யருள்வாயே.

சேக்கிழார் செய்தது

இளவழகனார்

(89-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்தாட்கொண்ட புராணத்தின் உள்ளுறைக் கருத்துக்கள் சிலவற்றை முன்பு பார்த்தோம். இப்பகுதியில், சேக்கிழார் செய்த விரகுகள் சிலவற்றைப் பார்ப்போம்.

நம்பியாரூரர் திருநாவலூரில் தோன்றினார். தோன்றிய காரணம் இன்னதென்று புலப்படுத்துகின்ற பொழுது, சேக்கிழார் வைதிக சைவம் ஓங்க அவதரித்தார் என்று தெரிவிக்கின்றார். கயிலையிற் காதலித்த மங்கையரைக் கூடும் பொருட்டு அவதரித்தார் என்று எண்ணாமல், ''அருமறைச் சைவம் ஓங்க அருளினால் அவதரித்த'' என்றும், ''தீது அகன்று உலகம் உய்யத் திரு அவதாரம் செய்தார்'' என்றும் தெளிவுபடுத்துகின்றார். இதனால், சைவம் ஓங்கினால் உலகம் தீது அகன்று உய்யும் என்னும் ஓர் உண்மையும் புலப்படவைத்துச் சேக்கிழார் தம் கருத்தைத் தெரிவிக்கின்றார்.

சைவம் என்றால் தெய்வத் தன்மை என்று பொருள். ஆதலால், தெய்வ அன்பும், திறமும் உலகத்தில் மிகுந்தால் தீமைகள் அகலும் என்பது இனிது விளங்கும்.

நம்பியாரூரர் மணப் பருவம் சேர்வதற்கு முன்னர், அருளும் கலையும் பொருளும் பொருந்தியிருந்தார் என்னுங் கருத்து,

> அருமறை முந்நூல் சாத்தி
>   அலகில் தொல் கலைகள் ஆய்ந்து
> திருமலி சிறப்பின் ஓங்கிச்
>   சீர்மணப் பருவம் சேர்ந்தார்

என்றும் தொடர்களால் ஆசிரியர் புலப்படுத்துகின்றார். 'முந்நூல் சாத்தி' என்பதனால் அருள் நெறியும், 'தொல் கலைகள்

குலவு தோகை மீதாறு முகமும் வேலும் ஈராறு
குவவி வாகும் நேர்காண வருவாயே.

ஆய்ந்து என்றதனால் கலைச் சிறப்பும், 'திருமலி சிறப்பின் ஓங்கி' என்றதனால் பொருட் செழுமையும் அவர் சார்ந்திருந்தார் என்பது தெளிவாயிற்று.

மக்கள் இம்மூன்றையும் இம்முறையே மதிப்புக் கொடுத்து எண்ணுதலும், மணம் செய்துகொள்ளுவதற்கு முன், இம்மூன்றையும் ஒருங்கே அடைவது என்பதும் அரிதா யிருக்கின்றன. அருளை முதன்மை யாகவும், கலையை அதற்கு அடுத்தபடியாகவும், பொருளை அதற்கும் அடுத்தபடியாக மதிப்பதும், அம்மதிப்பிற் கேற்றபடி நடப்பதும் உலகத்தில் சிறப்படுமானால், பெரும்பாலும் எல்லா இடர்களும் அற்றொழியும்.

ஆசிரியர் கருத்து, அவர் இயற்றிய தொடர் இம்முறைமையில் அமைந்திருப்பதனால் தெரிகின்றது. மக்கள் பெரும்பாலும் திருமண காலத்துக்கு முன் கல்வி பயிலுதல் மட்டும் செய்து, பொருள் தொகுத்தலைத் திருமணத்தின் பின்னும் அமைத்துக் கொள்கிறார்கள். அருள் செய்தலை, மூப்படைந்த இறுதி காலத்தில் மேற்கொள்ள எண்ணுகிறார்கள். சிறிது முன்னேற்றமுடையவர்கள், கல்வி கற்றலோடு பொருள் தொகுத்தலையும், மணப் பருவத்துக்கு முன்பே முயன்று செய்கின்றார்கள். கல்வியே கல்லாமலும், அருளையே நினையாமலும், பொருளையே பெரிதென்று கடைப்பிடிப்பார் கூட அதனையும் திருமணத்தின் பின் செய்து உயிர் வாழ்வோரே பலராய் இருக்கின்றனர். அன்றி அருள், கலை, பொருள் என்னும் மூன்றையும் திருமண காலத்திற்கு முன்பே செய்வார் சிலர் உளராயினும், அவருள்ளும் கலைக்கும், பொருளுக்கு முன் அருளே முதன்மையாய்ச் செய்யத் தக்கது என்று அதன் தரம் அறிந்து முதலில் கடைப்பிடிப்பார் மிகவும் அரியரா யிருக்கின்றனர். இத்தகையோருக் கெல்லாம், மேல் எடுத்துக் காட்டிய சேக்கிழார் பெருமான் செய்யுள் தக்க நெறி புலப்படுத்துகின்றது. மிகச் சிறு பருவத்தி லிருந்தே முதலில் அருளைப் பயிலத் தொடங்கி, அதன் பின் அதன் அடிப்படையிற் பழங் கலைகளைப் பயின்று, 'அருள்' 'கலை' என்னும் அவற்

பகவதியாலா நமோநம இகபரமுள்ள நமோநம
பவுருஷ சீலா நமோநம அருள்தாராய்.

தின் உதவிகளோடு வாழ்க்கைக்குத் தேவையான அளவிற் பொருளையும் தொகுத்துக்கொண்டு, அதன் பின்னர்த் திருமணம் செய்துகொள்ளுதலே வாழ்க்கைக்கு வாய்வதாம்.

நம்பியாரூரரின் வாழ்க்கை, இதற்கு எடுத்துக் காட்டு. இம் முறைமை மாறித் தாறுமாறாய் நடப்பதனால், அடிப்படை சரியாக இல்லாத காரணத்தால் மேன் மேலும் இடுக்கண்கள் விளைந்து உவகை அரித்து வருகின்றன.

மணப் பருவமடைந்த நம்பியாரூரருக்கு, அவர் பெற்றோர் தாம் விரும்பிய நன்மாதர் ஒருவரை மணங்கூட்ட முயன்றார்கள். மணம் பேசச் சென்றது முதல் திருமணச் சடங்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் வரையில், மண நிகழ்ச்சிகளை இருபது செய்யுட்களுக்கு மேலாக ஆசிரியர் விரித்து விளக்குகின்றார். பின்னால் திருவாரூரில் இறைவன் விரும்பியபடி பரவையார் திருமணத்தை நடப்பித்தபோது, அந்நிகழ்ச்சியை இரண்டொரு செய்யுட்களில் சுருக்கி முடித்துவிட்டார். முன்னே விளக்கியது, நடவாத திருமணமாய்த் தடுத்தாட் கொள்ளப் பட்டது. பின்னே சுருக்கியது, மெய்யன்புடன் தகுதியாய் நடந்த திருமணமாய்ப் பெரு வாழ்வு பயந்தது. நடவாத திருமணத்திற்குச் சேக்கிழார் ஆரவாரமான விளக்கம் செய்தார். நடந்த திருமணத்திற்கு மிகவும் சுருங்கிய வடிவம் தந்தார். இதனால் ஆரவார நிகழ்ச்சிகள் உண்மையைச் சேர்ந்தன அல்ல என்பதும், ஆரவாரமில்லாத மெய்ம்மைகள் உண்மையில் பயன்பட நடப்பவை என்பதும் விளக்கமாகின்றன. மக்கள் செய்கைக்குச் சேக்கிழார் இங்கே அறிவுரை கூறுமுறையில், கருத்தைப் புலப்படுத்தாமல், நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கு முறையிலிருந்தே அவரவரும் தாமே அறிந்து கொள்ளும் வகையில்,நெறிவகுத்துச்செய்யுள் இயற்றும் அழகு இனிது புலப்படுகின்றது.

இனி, தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சி ஆசிரியராற் பேசப் படுகின்றது. திருமணம் நிறைவேறுவதற்கு முன், இறைவன் ஒரு முதிய வேதியராய் வந்து, நம்பியாரூரரின் பாட்டனார்,

---

வனசமேன வண்டு தனதனன வென்று
மருவு சரணங்கள் அருளாயோ.

தாமும் தம் வழி வழி மரபினரும் அடிமைப்பட் டிருப்பதற்கு அடையாளமாகத் தந்த ஓலை ஒன்றைக் காட்டி, நம்பியாரூரரை ஆட்கொள்ள முயன்றார். வேதியருக்கு வேதியர் அடிமையாதல் இல்லை என்று நம்பியாரூரர் மறுத்தார்.

ஆசில் அந்தணர்கள் வேறோர்
அந்தணர்க்கு அடிமையாதல்
பேச இன்று உம்மைக் கேட்டோம்
பித்தனோ மறையோன் என்றார்

இதனால் ஓர் உண்மை புலனாகின்றது. அந்தணர் என்பவர்கள், இறைவனுக்கு அடியரே அல்லாமல், மக்களில் எவ்வளவு உயர்நிலையில் உள்ளவருக்கும் அடியராதலில்லை என்பதே அவ்வுண்மை. இத்திறம் உலகியலிற் கையாளப் படுமானால், அந்தண ரல்லாத மற்றவர்க ளிடத்தும் தெய்வ அன்பு சிறப்பாக வேரூன்றும். அந்தணர்களிற் பலர் மக்கட்கு அடிமையாய் உழல்வதனால், உலகமே ஒருவருக் கொருவர் அடிமைப்பட்டுத் தெய்வ நினைவு இழந்து, பல்வேறு குழப்பங் களுக்கும் இன்னல் களுக்கும் ஆளாகின்றது.

இறைவனுக்கு அடியராகும் மேன்மை, நம்பியாரூரரின் கருத்தினால் வெளிப்பட்டது. ஆனால், வேதியரா யிருந்த இறைவன், தமக்கு ஆரூர் பரம்பரை வழி வழி அடிமை என்று சாதிக்கும் கருத்தால், மற்றோர் அழகிய உண்மையும் புலப்படாமல் இல்லை. மக்களுக்கு மக்கள் அடியராதல் கூடாமை யாயினும், மக்களில் அடியாரா யிருப்பவருக்கு அடியராதல் பொருந்தும் என்பதும், அது தெய்வத்துக்கு அடிமை யாதலோடு ஒத்து அதனினும் உயர்ந்ததாக முடியும் என்பது மாகிய மெய்ம்மை புலனாகின்றது.

ஆதலால், நம்பியாரூரர் கருத்து தெய்வ அடிமையைச் சிறப்பித்த தாகவும், வேதியராய் வந்த இறைவனது கருத்து அடியாருக்கு அடியாராதலைச் சிறப்பித்ததாகவும் தெளிந்து

பத்தியை எனக்கருளி முத்தியை அளித்தவனர்
பச்சைமயில் உற்று வரவேணும்.

கொள்ள வேண்டும். தெய்வத்துக்கு அடிமையாதலை விட அடியாருக்கு அடிமையாதல் உயர்ந்த தாதலினால், இறைவனது வாதம் வென்றது. மக்கள் இவ்வுண்மையை அறிந்து நம்பியாரூராரின் தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சியை நுணுகி நோக்கி, இறைவனுக்கும் அவன் அடியாருக்கும் அடிமையாகும் பெரும் பேற்றைப் பெற்று ஓங்குதல் நன்று.

மேற்கூறியவாறு அடிமை செய்தல் என்பது இன்னபடி இருக்கவேண்டும் என்னும் உண்மையையும், ஆசிரியர் அழகாக எடுத்துக் காட்டுகின்றார். மறையோன், பித்தனோ என்று வன்றொண்டர் பேசியபோது, மறையோன் வடிவில் வந்த இறைவன் கூறுகின்ற சில சொற்கள், அனைவரும் ஆணித் தரமாக உள்ளத்தில் பதித்துக்கொண்டு நாளும் போற்றி ஒழுகுதற் குரியர். சேக்கிழார் அக்கூற்றைத் தெளிவான நன்மொழிகளில் இட்டுப் பின்வருமாறு செய்யுள் இயற்றினார்.

பித்தனு மாக பின்னும் பேயனுமாக நீயின்
றெத்தனை தீங்கு சொன்னு யாதுமற் றவற்றால் நாணேன்
அத்தனைக் கென்னை யொன்றும் அறிந்திலை யாகில் நின்று
வித்தகம் பேச வேண்டாம் பணி செய்ய வேண்டும் என்றார்.

நான் பித்தனாலும் ஆகட்டும்; அல்லது, பேயனாலும் ஆகட்டும்; இன்னும் எவ்வளவு பழி மொழிகள் நீ கூறினாலும் சரி; அவற்றிற் கெல்லாம் நான் என்றும் பின் வாங்கப் போவதில்லை. என்னுடைய உறுதியையும், போக்கையும் நீ சரியாய் அறிந்து கொள்ளவில்லை. ஆகவே இந்த வித்தைப் பேச்சுகளி லெல்லாம் ஒன்றும் பயனில்லை. சரியான அறிவுத் திறம் என்றால், வாயாற் பேசிக்கொண் டிருந்துவிட்டுச் செய்கையாற் பணி செய்ய வரவேண்டும் என்பது இப்பாட்டின் குரல்.

வாழவேண்டும் என்னும் கருத்துடைய மக்களுக்கு, இதை விடச் சிறந்த அறிவுரை வேறில்லை. இவ்வுரைப்படி வாழ்க்கையில் நடந்துகொள்வோர் வாழ்வோர்; அல்லாதோர் சாவோர்.

தேவர் பணிந்தெழு தென்பரங் குன்றுறை பெருமானே
வாழ நிதம் புனையும் பதந்தந் துனது அருள்தாராய்.

உலகியலில் மக்களுக்குள் கருத்து வேறுபாடும் பழிமொழி களும் தோன்றுவது அறியாமையினுல் என்பது தெளிவு. அதற் காக அறிவுடையவர்களும் தவருக நடந்து கொள்ளுவதென்பது, அதைவிட அறியாமையே அல்லாமல் வேறில்லை. தவருக நடந்து கொள்ளா விட்டாலும், தாம் கொண்ட கருத்தையும் எடுத்த செயலையும் அதற்காக இடையே தளர விடுதல் என்பது பின்னும் அறியாமையாம். பிறர் அறியாமையைச் சொல்லி, தான் அதனினும் அறியாமையில் வீழ்தல் எவ்வளவு வெட்கக் கேடு. புல்லியோர் சொற்கள் பொருளல்ல. நல்லோர் மதிப் புரைகளே நாடத் தக்கவை. கடமையிற் கருத்துடையோர் இவ்வாறே நடந்து கொள்வர். தெய்வப் பண்பில் மதிப்பும் அதன் ஒழுக்கமு முடையோர் என்பதற்கு இதுவே அடையாளம். மேற் கூறிய செய்யுள் இறை வாக்காக வருவதனுல், இத்தகைய நடத்தை தெய்வ சம்மதம் என்று இனிது புலப்படுகிறது. பித்தன் என்று நீ ஒரு சொல் சொன்னுய்; பின்னும் பேயன் என்று சொன்னுலும், இன்னும் எத்தனைப் பழிமொழிகள் சொன்னுலும் நான் அதற்காக நாணப் போவதுமில்லை; எடுத்த செயலை விடப் போவதுமில்லை என்னும் வீர உணர்வு, எவ்வளவு அழகாக இவ்வாக்கில் வெளிப்படுத்தப் படுகிறது. தகுதியை அறியாத காரணத்தால், பிறர் புன்மொழிகள் கூறுகின்றனர்.

பொருத்தம்போலச் சான்றுகள் காட்டி, வித்தைத் திறமாக வும் பேசுகின்றனர். உண்மையை அறிய மாட்டாத இந்த வித் தைப் பேச்சுக்கள் வெற்றுக் கட்டுரைகளே அல்லாமல், வேறு என்னவாகும்? நியாயம் பேசுகின்ற இருபக்கத்தார் வாதமும், அவரவர் மனச்சான்றுக்கு உண்மையா யிருந்தாலும், அவற்றுள் ஒருபக்கத்தார் வாதமே மெய்யிற் பொருந்துமல்லாது இரண்டும் பொருந்த மாட்டா அல்லவா? ஆதலால், நியாயம் போலக் கட் டிப் பேசும் வித்தை மொழிகள் காரியத்திற்கு உதவுமா? காரி யம் பெரிதே அல்லாமற் சொல் பெரிதாகுமா? வித்தகம் பேசுவதைவிடக் காரியத்தை நிறைவேற்றுவதே அறிவுக்கும்,

---

மகிமை மாநகர் செந்திலில் வந்துறை பெருமாளே
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்

ஆண்மைக்கும், உண்மைக்கும் அழகு. காரியத்திற்கு உதவாதவின் மானப் மானங்களும், போலி கௌரவமும், போலி எடுப்பும், போலிப் பெருமிதமும், போலிப் புகழும் புன் மக்கள் பாராட்டும் உண்மையில் நிலைக்குமா?

காரியத்தை நிறைவேற்றும் மானமே, புகழே, பிறவே உண்மை மானம் உண்மைப் புகழ் முதலியனவாம். நன் மக்களிடையே அவைதாம் நின்று நிலைப்பன. உலகியல் நன்கறிந்த ஔவைப் பிராட்டியார்,

மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்-செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்

என்று அருளிச் செய்ததன் அழகு, மெய்யுணர் வுள்ளவருக்கு எவ்வளவு இனிக்கின்றது!

நம்பியாரூரைத் தடுத்தாட் கொண்ட நிகழ்ச்சியால், எல்லாம் வல்ல இறைவன் மேற் கூறியவாறு நடந்து காட்டிய முறை, வாழ்வது எப்படி என்னும் நினைவுடைய நன்மக்களுக்குச் சிறந்த நெறி காட்டுவதாய் இருக்கின்றது. அறிந்த உண்மைகளைச் செயலிற் கடைப் பிடிப்பது, உலகத்துக்கு, வளத்துக்கு, சிறப்புக்கு எவ்வளவு நல்லது!

என்ன புண்ணியம்

(தி. சு. மறை மலையார்)

'என்ன புண்ணியம்' என்னுஞ் சொல்லைச் சொல்லும் போதே நம் உள்ளத்தில் ஒரு வகையான இன்பம் ஊறுவதை உணர்கின்றோம் அல்லவா? புண்ணியம் என்னுஞ் சொல்லுக்குப் பொருள், தீயன ஒழித்து நல்லன செய்தலே என்பது கற்றோர் முதல் கல்லாதார் ஈறுகக் கண்ட உண்மை. ஆனால்,

---

செந்திநகர் வாழும் ஆண்மைக் காரப் பெருமானே
செம்பொன் மயில் மீதிலே எப்போது வருவாயே

மக்கள் வடிவிலே தோன்றிய ஒரு சிலர், கற்றவரா யிருப்பினும் மற்றவரா யிருப்பினும் புண்ணியத்தைக் கண்டவர் யார்? பாவத்தைக் கண்டவர் யார்? என்றும், நன்மையாவது தீமையாவது என்றும், உலகத்தில் பிறந்தோம், இயற்கையை அநுபவிப்போம், ஈற்றில் இறப்பது உறுதி என்றும், 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்றும் நினைந்து, பசி வேளையில் உண்பதும் பின் உறங்குவதுமே இன்பந் தோன்றும் இடமெனக் கொண்டு, உண்டு உடுத்து உறங்கித் தங்காலத்தை அவமே கழிக்கின்றனர். அதனையே முடிந்த இன்ப மெனவுங் கருதுகின்றனர். என்னே அவர்தஞ் செயல்!

புண்ணியத்தை நினையாத மக்கள், தாங் கண்ட அப்பிறவியே முதலும் முடிவுமாகக் கருதுகின்றனர். மீண்டும் பிறவியுண்டென்பதை அவர்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்வதில்லை. உண்மையை உணர்ந்த பெரியவர்கள் உணர்த்தினும், உண்மையையவர்கள் செவிகொடுத்துக் கேளாது வீண்வாதம் பேசித் திரிவர். இத் தகையவர்களுக்காக வன்றோ நம் மூதாட்டியார்,

> 'புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
> மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
> ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லும்
> தீதொழிய நன்மை செயல்'

என்று அருளிச் செய்வா ராயினர். சான்றோர்கள் கூறும் அரிய பாடல்களையுங் கூட, அவர்கள் பிழைப்பின் பொருட்டுக் கூறியவைக ளாகும் என்று ஏசிச் செல்வதையுங்கூடக் கேட்கின்றோம். ஆகவே, மக்கட் பிறவி எடுத்திருந்தாலும், உண்மை கருத்துக்களை உணரும் புண்ணியம் இல்லாக் காரணத்தால், அவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றார்கள். எந்தப் பிறவியிலேனும் புண்ணியத்தின் பயன் இன்னது, என்ன புண்ணியம் செய்தனம் என்று உணரும் பேறு அவர்கட்குக் கிடைக்கும் எனக் கருதிப் புண்ணியத்தின் தன்மை யீது வெனக் காண்பாம்!

அஞ்சும் இமையவரை அஞ்சல் அஞ்சல் என்ற பெருமானே
மலரடி வணங்க என்று பெறுவேனே

புண்ணியம் என்பது நல்வினைக் கீடாகத் தோன்றும் இன்பப் பேறு. இவ்வின்பம் என்னும் புண்ணியம் என்றும் அழி யாத் தன்மையது. இப்புண்ணியத்தைப் பெறுதற் பொருட்டு மக்கள் பலப் பல வகையில் முயன்று அடைந்திருக்கின்றனர். அப் பலப்பல வகை யாவன எவை என்பதைக் கூறுவாம்.

உலகத்தில் தோன்றிய உயிர்கள் எல்லாம் துன்பத்தை நீக்கிக் கொண்டு இன்பமாக வாழ்தல் ஒன்றையே முதன்மை யாகக் கருதும். உயிர் வருக்கங்களுக் கெல்லாம், தத்தமக்குத் தேவையானவைகள் கிடைக்காத காலத்தில் துன்பமாகவே தோன்றும். தேவையானவைகள் கிடைத்துவிட்டால், அதனால் அடையக் கூடிய மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. ஆகவே, தேவை யானவை இன்னதெனக் காணும் போது, எவ்வுயிரையும் முதன் மையாக இடைவிடாது வருத்துவது பசி ஒன்றே யாகும். மற்ற தேவைகள் எல்லாம், பசிக்கொடுமைக்குப் பின்னதாகவே வைத் துக் கருதப்படும். ஆதலாற்றான்,

'மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்'

என்று நம் முன்னோர்கள் கூறி யிருக்கின்றனர்.

ஆகவே, இடையறாது வருத்துகின்ற பசித்துன்ப மொன் றையே எவ்வுயிர்க்கும் எவரும் நீக்கக் கடமைப் பட்டிருக் கின்றனர். அவ்வாறு நீக்குந் தன்மை, அதாவது பண்பு, நல்வினையின் பயனாக எவர்க்குந் தோன்றுமே யல்லாது, அது தானே மனத்தில் தோன்றிவிடாது. ஆதலால், தம் மினும் மிகச் சிறந்த நல்ல பண்புடைய ஒருவரைப் பின்பற்று தல் வேண்டும். உயிர்கள் நல்லவர்களுடன் சேரின் நற்பண்பும், தீயவர்களோடு சேரின் தீய பண்பும் அடையுந் தன்மையன. ஆதலாற்றான்,

---

நோய்கலந்த வாழ்வுறுமல் நீ கலந்து வாருஞான
நூலடங்க வோத வாழ்வு தருவாயே!

‘ நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
யல்லாது வேறு நிலையுளதோ- இல்லாளுஞ்
சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம்·வெளிமயக்கே இறைவா கச்சி யேகம்பனே’

என்று பட்டினத்தடிகளும்;

‘ நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவு நன்று ’

என்று மூதாட்டியும் எடுத்து அறிவுறுத்துவா ராயினர்.

மக்கள் நல்வினையாளர்களையே சேர்ந்து நற்பண்பைப் பெற வேண்டுமென் றறிந்தோம். நற்பண்பாளர்களே பிறர் பசித் துன்பத்தை நீக்குங் குணமுடையவர்க ளாவர். பசியை நீக்குவது உணவு ஒன்றே யாகும். உணவு ஒன்றை மட்டுந்தான் போது மானது எனக் கருதுங் குணமுடையர்; மற்றவைகளைப் ‘போது மானது’ என்று மன நிறைவு கொண்டு மக்களுங்கூடக் கூறுர். ஆதலால் ‘போதும்’ எனக் கூறக் கூடிய, மன நிறைவு கொள் ளக்கூடிய, உடற்கு வன்மையைத் தரக்கூடிய உணவு உடலுக்கு முதன்மையாவது போலவே, உடலில் வாழும் உயிருக்கு நிறை வையும் உறுதியையுந் தரக்கூடிய இறைவன் நாமங்கள் பலவற் றைக் கூறுதலே முதன்மையாகும். இறைவன் பண்புகளைக் கைக் கொள்ள, அவன் நாமங்கள் பலவற்றைக் கூறுதல் வேண்டும். மூர்த்தங்கள் பலவற்றைப் பலவிடங்களில் காணுதல் வேண்டும். கண்டால் மட்டும் போதுமோ? போதாது.

எனவே, இறைவன் இருப்புதோறுஞ் சென்று காணவும், நாவால் நாமங்கள் பலவற்றை நவிற்றவும், உடலால் வணங் கவும் நல்ல புண்ணியஞ் செய்திருந்தல் வேண்டும். கடவுள் திருமூர்த்தங்களைக் கண்களாற் காண, நாவார வாழ்த்த, மனம் ஒரு நிலையில் நிற்றல் வேண்டும். எல்லா உறுப்புக்களும் மனத்

செயங்கோ டணைத்த சிவமலை மருவிய பெருமானே
தழைத்த நயனமும் இருமலர் சரணமும் மறவேனே

தின் வழி நடக்குந் தன்மையன. ஆகவே, மனம் ஒரு நிலைப்பட்டால் எல்லா வுறுப்புக்களும் ஒரு நிலைப்பட்டுச் செல்லும்; அம் மனத்தின் வழி நடக்கும். திரு உருவங்களைக் கண்டவர்கள், வாயார வாழ்த்தியவர்கள் சிறந்த புண்ணியஞ் செய்தவர்கள் ஆவார்கள்.

அதனுற்றான், திருவலஞ்சுழி என்னுந் தலத்தில் எழுந்தருளிய இறைவனை வணங்கும் போது, திருஞான சம்பந்தப் பெருமான், தம் மனத்தை விளித்து, 'ஏ மனமே! இப்பரந்த உலகத்தில் நீ என்ன புண்ணியஞ் செய்தனை? முற்பிறவியிற் செய்த நல்வினைப் பயன் காரணமாக இப்புண்ணியத்தினைப் பெற்றாய். ஏனெனின், காவிரி யாறு சூழ்ந்து செல்லும் படியான திருவலஞ்சுழிவாணனை, வாய் குளிரப் பலகால் ஆதரித்துத் துதித்தும் பாடியும் வழிபடுங் காரணத்தால், என்ன புண்ணியஞ்செய்தனை?' என்று மகிழ்கின்றார், கேட்கின்றார்.

ஆகவே, இறைவனை வணங்கிப் பாடுகின்றவர்கள் நல்ல புண்ணியஞ் செய்தவர்கள் ஆவார்கள். அல்லாதவர்கள்,
'யாரோ அறியேன் பராபரமே'

அன்பர்களே! இக்காலத்தில், நீர் என்ன புண்ணிஞ்செய்தீர்! செய்யப் போகின்றீர், இப்போது செய்கின்றீர் என்று எதிரிலுள்ளவர்களைக் கேட்டுப் பாருங்கள். அப்போது என்ன விடை கிடைக்கின்ற தென்று தெரிந்து கொள்ளலாமல்லவா!

—o—

நமது கடமை

(ராமாயண பூஷணம், சேஷாத்திரி அய்யங்கார், கோவை.)

உலக மக்கள் யாவரும் தங்கள் தங்கள் நலனை உத்தேசித்தே பாடுபடுகிறார்கள். ஆனால் அதற்குச் செய்ய வேண்டியது யாது என்று நன்றாய் கவனிக்காமலும், பெரியோர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளாமலும்

கூடனெனினுமெனை நீயு னடியரொடு
கூடும் வகையை யருள் புரிவாயே

இருப்பதால்தான், அவரவர் கோரிக்கையைப் பெறவ
வில்லை. எக்குலத்தில் பிறந்தாலும், எவ்வளவு சிறுவனாக
இருந்தாலும், பெரியோர்கள் சொற்படி கடவுளை நம்பி
வழிபட்டால் மிகுந்த எதிர்பாராத நன்மையும் அடைய
லாம். சூரிய வம்சத்தில் பிறந்த துருவனது வயது 5.
அவன் தகப்பனார் உத்தானபாத மஹாராஜன். குண
மிகுந்தவன். கல்வியில் தேர்ச்சி பெற்றவன். முன் வினைப்
பயனால் துருவனுடைய தாயார் சுநீதி என்பவள், கணவ
னுடன் கூடி யிருக்க முடியாமல், தன் தனயனுடன் தனித்
திருக்க நேர்ந்தது. இளையளாகிய ஸுருசியுடனும், அவள்
மகன் உத்தமனுடனும் அரசன் இனிது வாழ்ந்து வரும்
சமயத்தில், துருவன், அரசன் தன் தகப்பனென்று அறிந்து
அவனிடம் சென்று, அவன் மடியில் ஆவலுடன் ஏற
முயற்சித்த பொழுது, இளைய மனைவியின் மோஹத்தில்
சிக்குண்ட அரசன், மைந்தனைக் கீழே தள்ளினான். ஆஹா
என்ன ஆச்சரியம்! குமாரனின் தழுவுதல் சொல்லொணுக்
களிப்பைக் கொடுக்கும் பொழுதும், மனைவியினிடம்
உள்ள மயக்கத்தால் அதை இழந்தான். அக் குழந்தையை
ஸுருசி, குழந்தாய்! நீ யார் மகன் என்றறியவில்லை. அந்தோ
பாவம்? வேறு பெண்ணின் வயிற்றில் பிறந்தவனென்று
அறியாமல், கிடைக்காத விஷயத்தில் ஆசைப்பட்டாய்.
ஈசனை வணங்கி என் வயிற்றில் அவனருளால் நீ பிறந்தால்,
இந்த ஆசை கிட்டும் என்றாள். அரசனின் புதல்வனுகை
யால், இவ் வார்த்தை பொறுக்காமல், உதடுகள் துடிக்கத்
தன் பெற்ற தாயிடம் வந்து நடந்ததைச் சொல்லி அலறி
னான். இதைக் கேட்ட தாய், கண்மணி! அது உண்மை

செறிவு மறிவு முறவு மனைய
திகழு மடிகள் தரவேணும்

தான். என்னை மனைவி என்று கூட சொல்லத் துணியாத கணவனை அடைந்தேன்; பாக்கியமில்லாத என் வயிற்றில் பிறந்த நீ, என் பாலைக் குடித்து வளர்ந்ததால் என் துரதிர்ஷ்டம் உன்னையும் பிடித்தது. இளைய தாயார் சொன்னது போல், உன் பெரியோர்கள் எந்தக் கடவுளை பூஜித்து நன்மை பெற்றார்களோ அக் கடவுளை நீயும் வேண்டினால், உனக்கு நன்மை பயக்கும் என்றாள். தாயின் வார்த்தையை நம்பிய துருவன், ஈசனை வழிபடும் வழி ஒன்றும் தெரியாமலிருக்கும் பொழுதும் காடு சென்றான். வழியில் நாரதர் அவனுக்குக் கருணை கூர்ந்து ஜபிக்கும் மந்திரம், பூஜை உருவம் இவைகளை உபதேசித்தார். அதை நம்பிக்கையுடன் யமுனைக் கரையில் வந்து அனுட்டித்தான் ஆகாரத்தைக் குறைத்து கடவுளைத் தியானிக்கும் பொழுது, ஐந்தாவது மாதத்தில் பகவான் தன் அன்பனின் தவத்தைக் காண வைகுண்ட மிருந்து வந்தார். உலகில் கடவுளைக் காண அவனிருக்குமிடம் தேடுவது வழக்கம், இங்கே தவம் செய்பவனைக் காண இறைவன் வந்தான். அவர் வந்ததையும் கவனியாமல் கடவுளின் உருவத்தை மனதில் பார்த்துக் களித்துக் கொண்டிருக்கும் பொழுது, கடவுள் அவன் மனதில் தெரியும் உருவத்தை மறையச் செய்தார். துருவன் பதறிக் கண்ணைத் திறந்தான். மனதில் கண்டது போல் எதிரில் கடவுளைக் கண்டு களித்தான். தோத்தரிக்க எண்ணுகிறான், அறியாதவனானமையால் முடியவில்லை, இதைக் கண்ட இறைவன் கருணை புரிந்து, கலையின் உருவமான தன சங்கினால் அவன் கன்னத்தை தடவ, உடனே துருவன் கற்க வேண்டியதைக் கசடறக் கற்ற

தெரிவையர்க ளாசை மிஞ்சி வெருகவலை யாயுழன்று
திரியுமடி யேனை யுன்ற னடிசேராய்

ஞானியாக ஆகித் தோத்தரித்தான். எவன் அருளால் கால் நடக்கிறதோ, கைகள் எடுக்கின்றனவோ, கண் பார்க்கின்றனவோ, வாய் பேசுகிறதோ, காது கேட்கும் வல்லமை அடைகிறதோ, எவன் தன் அருளால் என் உள்ளே தெரியாமல் ஒளித்திருந்த வாக்கைக் கிளப்பிப் பேசும்படிச் செய்தானோ அவனே கதி என்று கொண்டாடினான். கடவுளிடம் ஆசைப்பட்டு கேட்க வந்த ஆசையை மறக்கச் செய்தது ஈசனின் தரிசனம்; இது ஒரு பெரிய ஆச்சரியம். சிலவான் பொருளில் உள்ள ஆசை, கடவுளைக் கண்டால் தொலையும் என்று கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசிக்கவில்லையா? தன் முன்னோர்கள் அடையாத உயர்ந்த இடத்தை வேண்டினான். அப்படியே வரமளித்து கடவுள் மறைந்தார். கஷ்டமே கலப்பில்லாத ஆநந்தத்தைக் கொடுக்கும் இறைவனிடம், உயர்ந்த இடம் கேட்டோமே என்றும் வருந்தினான். என்னே கடவுளின் கருணை! இப்படி இவன் தன் தேசம் வருவதைக் கேட்டு, களிப்புடன் அரசன் பரிவாரங்களுடனும், மங்கள வாத்தியங்களுடனும் எதிர்கொண்டு வந்தான். தன் துரதிர்ஷ்டத்தை நினைத்து குமாரனின் வருகையை நம்பவில்லை. எனினும், முன் நாரதன் உன் குமாரன் சீக்கிரம் க்ஷேமமாய் வருவான் என்றதை நம்பி களித்தான். துருவனைக் கண்ணாரக் கண்டு தழுவி ஸுருசியும் களித்தாள். இது தான் கடவுளை நம்பினவனுக்கு வந்த உயர்வு. எந்த இளையதாய் துருவனை முன் வெறுத்தாளோ, அவளே இப்போது களித்தாள். இப்படியே கடவுளிடம் அன்பு உண்மையாய் இருக்கும் மனிதனுக்கு ஓர் உயர்வு உண்டு. அஃதென்னவென்றால்,

---

,செகத்தி யாவும் வேறாக நிகழ்ச்சியா மநோதீத
சிவச்சோரூப மாயோகி யெனஆள்வாய்

தன்னை வெறுத்த தாயிடம் தனக்கு உயர்வு வந்தும், அன்பு பாராட்டினான். துருவன் வயது வந்த சமயம் ராஜ்யத்தையும் பெற்று இனிது வாழ்ந்தான். இப்படி கடவுளை நம்பி, பெரியோர்கள் வாக்கியத்தைக் கேட்டு, கடமையை செய்தால், ஒருவர்க்கொருவர் அன்புடனும் மனத்தாங்க லில்லாமலும் இனிது வாழலாம்.

மங்களம்

பெறுவது நிச்சயம்

வா. ராமலிங்கம் பிள்ளை, பேட்டை.

உலகில் உயர்ந்த பிறவியாகிய மக்கள் யாக்கையைப் பெற்ற நாம், ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையில் இன்ப துன்பம் விரவி இருத்தலைக் காண்கின்றோம். இரண்டும் விரவப்பெறாமல் தனியே இன்பமோ துன்பமோ கொண்டு வாழ்பவர் எவருமிலர். ஒன்றிற் கொன்று மிகுந்தும் குறைந்தும் காணப் பெறும். இதன் காரணம் என்னவெனக் கருதுவோமானால், ஆன்மாக்களின் வினைக்கீடாக இன்ப துன்பம் இரண்டையும் அனுபவித்துக் கழிக்கவே, எல்லாம் வல்ல சிவபரம் பொருளால் பிறப்பிறப்பு நிகழ்கின்றது. அந்நிலையில் நம் வினை காரணமாகவே நாம் இப் பிறப்பை எய்தியுள்ளோம். இதனைத் தாயுமானப் பெருந் தகையார், 'காயாமுன் மரமீது கல்லேறு செல்லுமோ கடவுள் நீ யாங்களடியோம்; கன்ம பந்தத்தினாற் ஜென்ம பந்தம் பெறக் கற்பித்த துன்னதருளே' எனக் கூறிய

ஜெபதப நேசித் தார வார பரிபுர
பாதத் தாளு மாறு திருவுள நினையாதோ

வாற்றாலும், 'வினைப்போகமே யொரு தேகங் கண்டாய்' என்ற ஆன்றோர் வாக்காலும் அறியலாகும்.

இன்ப துன்பம் விரவியதுதான் இவ்வுலக வாழ்க்கை என்பதை, 'இன்ப முண்டேல் துன்பமுண்டு ஏழை மனை வாழ்க்கை, முன்பு சொன்ன மோழைமையால் முட்டை மனத்தீரே, அன்பரல்லா ரணியார்கொன்றை யடிகள் அடி சேரார், என்பர் கோயில் எதிர் கொள்பாடி என்ப தடைவோமே' என்ற ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாக்கினல் தெளியப்படும். எனவே, இவ்வுடல் பெற்ற நாம் இரண்டையும் அனுபவிக்கக் கடமைப் பட்டவர்களாகவே இருக்கின்றோம். இன்பம் வந்த போது மகிழவும், துன்பம் தொடர்ந்த போது துக்கித்து வருந்தவும் கூடாது என்பதை, 'நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங் கால் அல்லற் படுவதெவன்' என்ற திருவள்ளுவர் வாக்கு நன்குணர்த்துகின்றது.

இனி இவ்விரண்டுவித அனுபவமும் ஒழிந்து நிற்கும் திருவருட்டிறம் பெறுதலே நிலைத்த இன்பம். அதுவே அடிசேர்முத்தி. அஃது இருவினையும் துய்த்து ஒழிந்த போது எய்தப் பெறும் என்று பேசப்படுகிறது.

இருவினையையும் அனுபவிக்கும் பொழுதே, மேல் வினை தேடலின்றி அவை அற்றொழிய, அழியாத இன்ப நிலை அடையப் பெறுதலே ஏற்றமாம். அதற்கு நம்மனோர் வகுத்த நெறிமுறைகள் மிக எளிதானது. இடையறாத சிவ சிந்தனையும், சிவன் பெருந் தன்மையும்,

---

இனியு னடியரொ டொருவழி படஇரு
தமர பரிபுர சரணமு மவுனமும் அருள்வாயே

சிவனடியார் சீரியபுகழ் போற்றுதலும், அஞ்செழுத் தோதலும், அவர் நாமங்களை உச்சரித்தலுமேயாம் என முன்னோர் மொழிந்துள்ள உண்மையை நாம் உன்னி உணர்ந்து கொள்ளுதல் கடப்பாடாம். சிவ நாமமாம் ஸ்ரீ பஞ்சாட்சரம் உச்சரித்தலின் மேன்மையும், அது பிறவி நோயை நீக்கும் என்பதும்,

வாயிலே வைக்கு மளவில் மருந்தாகித்
தீய பிறவி நோய் தீர்க்குமே—தூயவே
கம்பெருமா தேவியொடு மன்னு கயிலாயத்
தெம்பெருமா னோரஞ் செழுத்து

(11-ம் திருமுறை)

சிவனடியாரைப் போற்றுஞ் சிறப்பால் நினைத்த இன்பம் பெறலாம் என்பது,

பாரகலத் துன்பங் கடந்தமரா ராற்பணியும்
ஏரகலம் பெற்றலும் இன்னுதாம்—காரகிலின்
தூமங் கமழ்மாடத் தோணி புரத்தலைவன்
நாமஞ் செவிக்கிசையா நாள்.

(ஷை)

நெறி முறைப்படி அருள் வள்ளல்களைப் போற்றி நின்றால், பொன்னுலக இன்பம் பொருந்துவது நிச்சயம் என்பது,

பெறுவது நிச்சயம் அஞ்சல் நெஞ்சே பிரமாபுரத்து
மறுவறு பொசிகழல் ஞானசம்பந்தன் வாழ்த்துத
லான்

அருணை நகர்மிசை கருணையோ டருளிய
பரம வொருவச னுமிரு சரணமு மறவேனே

வெறியுறு கொன்றை மறியுறு செங்கை விடை
யெடுத்தோன்
பொறியுறு பொற்கொடி எந்தைபி ரானமர்
பொன்னுலகே
(ஷை.)

என்பனவாய திருமுறைப் பாக்களால் தெளியக் கிடக்கின்றன.

மண்ணுலகிற் பிறந்து நும்மை வாழ்த்தும் வழி
யடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனே னின்று
கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின்
மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான் மலை
உத்தமனே

என்ற ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருவாக்கும் சிந்திக்கற்பாலதாம்.

வா. ராமலிங்கம் பிள்ளை,
பேட்டை.

கலிகெடு பலதுன்பமும் அகலிட நின்
கழலிணை கருதும் படிபாராய்

முருகம்மையார்

ரசபதி

தோற்றம்

மலர் நிறைந்த சோலைகள், எங்கும் மணம் கமழ்கின்றன. புதுத் தேன் மலர்களில் புளகிக்கின்றது; பருகிய வண்டுகள் பண் பாடுகின்றன. பண்களின் அதி தேவதைகள், பண்களில் தங்கி இன்ப நிருத்தம் இயற்று கின்றன. அமைதிக்குரிய இந்நிலை, தவம் கைவல்ய மான பாண்டி நாட்டில் அன்றும் இன்றும் என்றும் உண்டு.

பாண்டி நாட்டுப் பழம்பதிகள் பல: அவைகளில் ஒன்று திருப்பரங்குன்றம். அற்புதங்கள் பலவுடைய அத்தலத்தில், ஒரு செட்டித் தெரு இருக்கிறது. பெருங்குடி வணிகர் நிறைந்த பெருந் தெரு அது.

அவர்கட்குத் தலைவர் சோமேசம் செட்டியார். அவர், ஆட்சி யாளர் தந்த எட்டிப் பூ பட்டம் பெற்றவர். வாய்மை வழுவாத வர். செல்வஞ் சிறந்தவர். கலைகளின் உறவால் கனிந்த மனத் தினர். அவருடைய தேவியின் பெயர் சாலி. அருந்ததியின் பெயர் இது; பெற்ற பெயருக்கு ஏற்ப, சாலி கொண்டான் குறிப் பறியும் குணவதி.

வளம் சிறந்த வாழ்க்கை மணம் பெற, மகவிலாக் குறை, பல நாள் மனத்தைப்பாதித்தது. அதற்கான நல்ல அறம் பல நடத்தினர். வயதோ மேலும் மேலும் வளர்கிறது. கவலை மிகுகிறது;கணவர் கவலையைக் கருதும் போதே சாலிக்கு அடி வயிறு குழம்புகிறது.

முருகன் திருமுன் முறையிடலாம் என்றாள் சாலி. உண்மை தான் என்றார் செட்டியார். ஆனி முதல் ஆலய வழிபாடு, ஆரம்ப மாகியது. குலம் விளங்க ஒரு மகவையருள்! பரங்கிரி பரமா! செட்டி குமரா! கதிரேசா என்று தேவியுடன் கதறுகிறார் செட்டி யார்.

ஏழை தனக்கும் அநுபூதி
ராசிதழைக்க அருள்வாயே

புரட்டாசி முதல் தேதி. பகல் வேளை. உணவுண்டு சோமேசர் ஊஞ்சலில் இருக்கின்றார். தம்பலம் மடித்துத் தருகின்றாள சாலி. நாலு மாதங்களாக வீட்டு விலக்க மாகவில்லை எஜமானி யம்மாள் என்றாள் பணிப் பெண். என்ன? என்று எழுந்தார் செட்டியார். பட படத்தது மனம். நம்பன் திருமுன் நான்கு மாதமாக முறையிடு; ஆரம்ப நாளே கருவாய்ப்பு. என்ன வியப்பு!

மாடியில் விரைந்து ஏறினார். கோயில் தெரிகிறது. என் குடி வாழ வைத்த குமரேசா! வள்ளிக் கொடி படர் பர்வதமே! நலம் சிறந்த நினது அருள் நீடூழி வாழி! என்று துதித்தார். உமையாள் குமரன் அடியார் உவக்க, அளவிலாத் தானம் அளித்தார்.

பங்குனித் திங்கள். ரேவதி நாள். கலைமகளும் திருமகளும் களிகூர, பெண் மகவு ஒன்று பிறந்தது. முருக னருளால் பிறந்த செல்விக்கு, முருகம்மையார் என்ற பெயரைச் சூட்டினர்.

சாதனை

வளர்பிறை போல் மகள் வளர்ந்து வந்தனள். பேசப் பயின்ற காலம் முதல், அம்மையை அத்தனை, பிறரையும் கூட அம்மா அப்பா என அழைப்பதில்லை; எடுத்த எடுப்பில், முருக நாமம் முதல் வரும்; அதன்பின்தான் பிற செய்தி வரும். முருகா சிற்றுடை கட்டு! முருகா நானும் வருகிறேன் என்று கொஞ்சுவார் முருகம்மையார். இளஞ் சிறுமிகளுடன் விளையாடும் போதும், அப்பெண்களை, வருக முருகா! முருகா! நிலாச் சோறு சமைக்கலாமா என்று மொழிகள் இருக்கும். இங்ஙனம் முருக நாமம் நாளதோறும் ஒரு கோடி வாய் வழி நடமாடும்.

பருவம் எய்தினர் பாவையர். ஆண்டொன்று அகன்றது. கல்வி, செல்வம், அழகு எலாம் குடி கொண்ட மங்கையாரை, மணம் பேச வந்தோர் பல்லோர். இயற்கை யழகுடன் செயற்கை யணியும் செய்தது குடும்பம். பார்க்க வந்தவரை யெல்லாம், வாருங்கள் முருகா என்று வணக்கம் செய்தாள் முருகம்மை.

திருப் பொற்பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித்து அருள்வாயே

வாதப்போக்கு

பெண் பேச வந்தவருள்,ஒருவர் பெயர் முருகேசம் செட்டியார். தலையி லடிப்பதுபோல், பெரியவரைப் பெயர் சொல்லி அழைக்காதே அம்மா என்றாள் ஒரு கிழவி.

அவர் பெயர் அது என்று யானறியேன் முருகா!

மறுபடியும் சொல்கிறாயே அம்மா!

எனக்கு அப்படிச் சொல்லிச் சொல்லி வழக்க மாகிவிட்டது முருகா!

தொட்டதற் கெல்லாம் முருகா என்பது அசம்பாவிதமாகத் தோன்றியது; தாயும் தந்தையும் கூட அதைத் தடுப்பதாக இல்லை. இது பணத் திமிர் என்று கொண்டாள் ஒருத்தி; பயித்தியம் என்று கருதினாள் மற்றொருத்தி; வாயாடி மகள் என்பது மற்றும் சிலர் தீர்ப்பு.

பிறகு வருகிறோம் என்று போக்குக் காட்டி, வந்தவர்கள் சென்றார்கள். அவர்களை யடுத்து சிலர் வந்தார்கள்; அவர்கட்கும் இந்த முருகா முருகா பிடிக்கவில்லை. ஒருத்தி துணிந்து அருகில் வந்தாள்; இப்படி இடையறாது சொல்வது, குடும்ப வாழ்க்கைக்கு ஒத்து வராது அம்மா என்று காதோடு ரகசியமாகக் கூறினாள்.

சொன்னால் பிறப்பொழியும் தூய கூற்றகலும்
எந்நாளும் பேரின்பம் எய்தும் நெஞ்சே—முன்னாளில்
பொருசூரன் வல்லுடலம் போழ்ந்த அயில் ஏந்தும்
முருகவேள் என்னும் மொழி

என்று பெரியோர்கள் கூறியிருப்பது, நினைவிருக்கிறதா முருகா!

அது என்னமோ அம்மா; எனக்கு ஒன்றும் தெரியாது; ஓயாது முருகா முருகா என்னும் வீட்டில், பல்லிகூட சேராது என்று பாட்டியார் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஏன் முருகா! பல்லி, கரப்பான்கள் வீட்டில் இருக்க வேண்டுமா?

ஆவியுறை கூட்டில் ஞானமறை பூட்டி
யான நிலை காட்டி அருள்வாயே

ஒருகால் முருகா பரமா குமரா உயிர்கா என ஓது அருள் தாராய்

என்ற மேலவர் பொன் மொழிகள், என் உள்ளம் நின்று உபதேசிக்கின்றன. ஆதலின், இவ்விஷயத்தில் மட்டும் என்னைத் தடை செய்ய வேண்டாம் என்று விண்ணப்பித்தார். இவைகளை மறுக்க முடியாமல், வருகிறோம் என்று வந்தவர்கள் சென்றார்கள். இங்ஙனம் வந்து வந்து பாதித்தவர்க் கெல்லாம் முருகம்மை,

முருகன் என்றதுமே எனக்கொரு மோகம் பிறக்குதம்மா
அருகில் வாரானோ என்ற பெரும் ஆசை துடிக்குதம்மா

முருக நாமத்தால் மரண பயம் தீரும்; வாழ வழி தோன்றும்; அமைதி நிலை சூழும்; ஆனந்தம் எய்தும் எனும் மகள் வாதம் கேட்ட பெற்றோர் கண்கள், இன்பநீரை யிறைத்தன. கடி மணம் பேச வந்த மற்றவர் கண்கள், கனல் பொறிகளைக் கக்கின. வாதம் தாங்காமல் திரும்பினவர்கள், மற்றவர் மணம் பேசல் குறித்து, சோமேசர் மாளிகை வாயில் மிதியாதபடி சூழ்நிலை யெழுப்பினர்.

பங்காளிகள் இது குறித்து சோமேசரிடம் விவாதித்தனர். பிறந்த நாள் முதல் முருக நாமத்தால் உயிர்ப்பாளைத் தடுக்க முயல்வது தவறு; பாவமுமாகும் என்றார் சோமேசர்.

பங்காளிகள் ஆத்திரத்தால் பதறினர். பெண்ணைப் பெற்றோர்க்குப் புத்தி கற்பிக்க எண்ணினர். முருகம்மைக்குப் பயித்தியம்;பேய் பிடித்துள்ளது என்று கோளாறு பலகூறி, திருமணம் நிகழாதபடி தடுத்து வந்தனர். சூழ்ச்சி யிதனை சோமேசர் அறிவார். என்ன செய்ய முடியும் அவரால்? மகள் வயது 21 ஆயிற்று!

பிராரப்தம்

சோழ நாட்டில் தென்னகர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. தனஞ்சய செட்டியார் என்ற பெயருடைய ஒருவர், அங்கிருந்து திருப்பரங் குன்றம் வந்தார். ஒரே நாளில் தாய் தந்தையர் மரணம் எய்த, அதனால் மனமுடைந்து, விரக்தியுடன் புறப்பட்டு, சோழ நாட்டுத் தலங்களைச் சேவித்து, பின் பாண்டி நாட்டிற்கு வந்து, மதுரையைச் சேவித்து, தனக்குத் தூரபந்துவான சோமேசம் செட்டியார் கிளைவுடன் வந்து, அவர் மாளிகைக்குள் நுழைந்தார்.

திருவருட் கருணைப் பிரபையாலே
திரமெனக் கதியைப் பெறுவேனே

வந்தவரை வரவேற்ற சோமேசர், அவர் வரலாறறிந்து ஆறுதல் கூறி, நீராட வைத்து, உணவருத்தி, மேல் மாளிகையில் சிரமபரிகாரம் கருதிப் படுக்கை விரித்துச் சிறிது கண்ணுறங்கச் செய்தார்.

அதன்பின் சோமேசர், சாலியிடம், பங்காளிகளின் பகைப் புலனை விவரித்தார். 25 வயதுடைய தனஞ்சயன் தூர பந்துவானாலும், மகளை மணக்கும் உறவுமுறை யுடையவன்; பங்காளிகளின் கண்ணில் இவன் படாதபடி காத்தால், அடுத்த மாதத்திலேயே இவனுக்கு முருகம்மையை மணம் முடித்தல் இயலும் என்று திட்டமிட்டார்.

கண்ணயர்ந் தெழுந்த தனஞ்சயரிடம், லோகாபிராமமாக வார்த்தை யாடினார். அதன்பின், மண வாழ்க்கையில் உனக்கு விருப்பமில்லையா என்பதுடன், வார்த்தையை முடித்தார். தாய் தந்தையர் இன்னம் சிலநாள் இருந்தால், அதற்குரிய முயற்சிகள் நடைபெற்றிருக்கும்; இப்போது எனக்குப் பரிபவர் யார் மாமா என்றார் தனஞ்சயர்.

ஏன் நான் இருக்கிறேனே! உனக்கு என்ன குறை! அடுத்த மாதம் அதற்கு ஒரு திட்டம் அமைப்போம்; நீ மட்டும் அதிகம் வெளியே போகாதே! அதற்குக் காரணம் உண்டு என்றார் சோமேசர்.

நல்லது என்றான் தனஞ்சயன்.

இடையில ஒரு திங்கள் அகன்றது; சாலி யம்மையின் உபசாரம், செட்டியார் காட்டிய பரிவு, முருகம்மையின் அழகு, குணநிசயம், முருக வழிபாடு முதலியன தனஞ்சயரின் மனத்தை வசீகரித்தன.

திடீரென்று ஒருநாள் சோமேசர் அழைத்தார்; ஏன் மாமா என்றார் தனஞ்சயர். எனக்கும் வேறு சேய்களில்லை! உனக்கும் தாய் தந்தையர் இல்லை. முருகம்மையை உனக்கே மண முடித்துத் தர உத்தேசம். உனக்கு இது உடன்பாடுதானா

மாமா! என்னுடைய ஜாதகம் பாபமானதென்று எண்ணியிருந்தேன்; முருகம்மையை மணக்கும் பாக்கியம் எனக்கு இருப்

பதிபரவலை யுற்று அநுபூதியில்
அப்படியே யடைவித் தருள்வாயே

பதை இன்று உணர்கிறேன். தங்கள் விருப்பப்படியே செய்யுங்கள் என்று, தனஞ்சயர் சோமேசர் திருவடியில் வீழ்ந்தார்.

மண ஏற்பாடுகள் விரைந்து நடந்தன. யார் மாப்பிள்ளை? எந்த ஊர் என்று கேட்ட பலர்க்கும், பிறகு சொல்கிறேன் என்று போக்குக் காட்டி, திடீரென்று நாளை மணம், இன்று தாம்பூலம் என்று யாவர்க்கும் செய்தி யறிவித்தார் சோமேசர். ஆஹா! ஏமாந்தோம் என்று, பகைப்புலன் எழும்பியவ ரெல்லாம் பல்லிளித்தனர். என்ன செய்ய முடியும் இனிமேல்? பக்குவமாகத் திருமணப் பணியில் பங்கு கொண்டனர் பங்காளிகள.

திருமணம் நடந்தது. நகமும் சதையும் போல் ஒன்றியிருந்தனர் தம்பதிகள். மாமனர் செல்வத்துடன், பெற்றோர் செல்வத்தையும் பிணைத்தார் தனஞ்சயர். பெருக்கி வர்த்தகத்தில் பெரும் பொருள் திரட்டினர்.

சோமேசர்க்கு க்ஷேத்திர பாத்திரையில் சிந்தனை பிறந்தது. தம்பதிகளிடம் கருத்தைக் கூறினர்; பிரியா விடை பெற்று சாலியுடன் சென்றார்.

கணவனுக்குத் தன் கையிலேயே சமைத்து உணவு பரிமாறுவதில் முருகம்மைக்கு வேட்கை. முருகு! என்று கணவன் விளித்ததும், முருகா வந்தேன் என விரைந்து வினடமொடு நிற்பர்; அடடா! என்ன இன்பமான வாழ்க்கை!

திரண்ட செல்வம் இருந்தும், மேலும் சேர்க்கும் பேராசை தனஞ்சயர் மனத்தில் எழுந்தது. கப்பல் வர்த்தகத்தில் கவனம் சென்றது. அதற்கான ஏற்பாடுகள் விரைந்து நிகழ்ந்தன. எல்லாம் சரி. பிரிவிற்கு முருகம்மை இடந்தர மாட்டாளே என்ற பீதி பிறந்தது. சிந்தனை வலுத்தது. முதன்மை குமஸ்தா முருகப்பன் செட்டியார்; பெற்றவர் சோமேசம் செட்டியார்; எனினும, முருகம்மையை எப்போதும் எடுத்து வளர்த்த பாசம் உடையவர் முருகப்பர். முருகம்மையும் அவர்மேல் முதிர்தத அன்புடையவள். தான் போய்த் திரும்பும் வரை, முருகம்மைக்குத் தேறுதல் சொல்லவேண்டும் தாங்கள் என்று அவரிடம் பல சொல்லி வேண்டினர் தனஞ்சயர்.

வண்கயிலை சுற்றி வந்திடு பதத்தை
வந்தனைசெய் புத்தி தருவாயே

முருகப்பன் செட்டியார், முதலில் இதற்கு உடன்படவில்லை. என்ன செய்வது? கட்டளையிடுவது இன்றைய எஜமானர். நான்கு ஐந்து திங்களில் திரும்புவதாக வாக்களித்த பின், விதியின்றி இணங்கினார்.

கப்பலேறிய தனஞ்சயர், பாண்டி நாடு கண்ணுக்கு மறையும் வரை, அத்திசையையே நோக்கியிருந்தார். தன் பிரிவு தாங்காமல், முருகம்மை எப்படித் தளர்வளோ என்று மனம் இடிகிறது; என்ன செய்வது என்று ஒருவாறு ஆறுதலடைகிறது மனம்.

காலையில் முருகம்மை கணவரைக் கண்டிலள்; பகலும் வரவில்லை; இரவு மணி பத்து ஆயிற்று: அதுவரை வரவில்லையெனில், அஞ்சியது மனம். காலை முதல் தானும் பட்டினி; தயாரித்த உணவெல்லாம் வறிது கிடக்கிறது. மாளிகை வாயிலில் எட்டிப் பார்த்தார்; முருகப்பஞ் செட்டியார் முன்வாயிலில் இருக்கிறார்.

எங்கே முருகா என் முருகன் என்று வீறிட்டார்;

வருவாரம்மா வருவார். அவர் எவ்வளவு பெரிய வர்த்தகர்! காரியம் பல; காலை வருவார்; கவலை விடு; உணவுண்டு படு என்று பயம்பட உரைத்தார். உள் நுழைந்த முருகம்மைக்கு உறக்கம் வரவில்லை; முருகா முருகா என்று வாய் முனகிக் கொண்டேயிருந்தது.

பொழுது விடிந்தது. காலை 8 மணி. கதறிய குரல் கேட்டு ஓடிவந்தார் முருகப்பர். அருவி யெனப் பெருகுகிறது கண்ணீர்; நிலைகுலைந்து முருகம்மை நிற்கிறாள்.

என்ன அம்மா இது! வருந்தல விடு. மணந்த நாள் முதல் உன் கணவர் புகழ் மங்கி வருவதை யறிவாயா நீ!

ஆம். மணத்தின்பின் இரண்டொரு மாதமானதும், திரைகடலோடித் திரவியம் தேடு என்பது வணிகர்க்கு வாய்த்த வழிமொழி. அதை மீறினார் உன் கணவர். குலமுறை கெடுத்தான் என்று கொதித்தனர் உறவினர். அவனுக்கு அறிவில்லையேல், திருத்த வேண்டாமா அவள்; பிடாப்பிடியாக கணவனை வீட்டில் வைத்திருக்கிறாளே என்று உறுமினர்; தன் பெயர்க்குக் களங்கம்

ஓங்கும் ஐம்புல வேடர்வினைத்தின் பயர்வேலை
ஓம்பெறும் ப்ரண வாதியுரைத்து எந்தலை யான்வாய்

வரில் தவறில்லை. உன்மேல் ஊர் சொல்லும் குறை கேட்க ஒப்ப வில்லை அவர் மனம். உரைத்தால் நீ பிரிவிற்கு உடன்பட மாட்டாய்; தர்ம சங்கடம். என்ன செய்வார் பாவம்! இரண் டொரு திங்களில் திரும்புவதாகச் சொல்லிப் போயிருக்கிறார்; விரைந்து திரும்புவார் என்று சாதுரியம்பட முருகப்பர் சொல்லி முடிக்குமுன், அடியற்ற மரம் போல் நிலம் வீழ்ந்தாள் முருகம்மை.

பயந்து போனார் முருகப்பர். பன்னீர் தெளித்தார்; பீலி கொண்டு விசிறி, அயர்வை அகற்றி ஆறுதல் பல கூறினர்.

அருள் தாபம்

மயிலேறி அயிலேந்தும் முருகனை மனத்திருத்தி வழிபடும் முருகம்மை, உப்பில்லா உணவு ஒரு வேளை உண்டு, என் முருகன் விரைந்து வர அருள் புரிக முருகையா என முறையிடலே தொழிலானர்.

உத்தமத் திரு, கற்பின் அணியிழை உள்ளம் நொந்தது ஆதலின், போன இடமெல்லாம் தனஞ்சயற்குப் பொல்லாப்பே விளைந்தது. வியாபாரத்தில் ஏராளமான நஷ்டம். எத் திசிற்குச் சென்றாலும் அஃதே செய்தி. வாய்த்த மனையாள் அங்கு வருந்து கின்றாள்; அதன் பயன் இது என்று அறிந்தார். ஊர் திரும்புவது உத்தமம் என்று உறுதிகொண்டது உள்ளம்.

சூழ்ச்சிப் புயல்

பாண்டி நாட்டுக் கடற்கரை சேர்ந்ததும், பணியாட்களுக்கு உரைக்க வேண்டுமவற்றை உரைத்து, தான் மட்டும் விரைந்து திருப்பரங் குன்றம் சேர்ந்தார். கடைவீதி வழியே வரும் அவரை, சோமேசருடைய பங்காளிகள் சிலர், தம் பாபக் கண்களால் பார்த்தனர்.

அடடா! தனஞ்சயச் செட்டியாரா! வரவேணும் என்று இன்முகம் காட்டி வரவேற்றனர். நலம் வினவினர்; லாப நஷ்டம் குறித்து உசாவினர். உள்ளதை மறைத்து, சுவல்ப லாபம் என்றர் தனஞ்சயர்.

உலகப் புகழ்ப் புலம்பு கவியற் றுணர்ச்சி கொண்டு
உன் உரிமைப் புகழ் பகர்ந்து திரிவேனே

அவர்க்கென்னடா குறை! அருமையான புத்திமான்!!

புத்திமட்டும் போதுமா? உலக அநுபவம் இல்லை; என்ன செய்யலாம்!

பேச்சுப் போகும் போக்கை நோக்கி, என்ன செய்தி யென்று துடிப்போடு கேட்டார் தனஞ்சயர்.

நீர் செல்லும் செய்தியை, எங்கள் யாரிடமேனும் அறிவித்தீரா!

சொன்னால் தடுப்பீர்கள் என்ற அச்சந்தான்!

சாமர்த்தியமாகப் பேசாதீர்! அறியாத பெண் தனித்து விட்டுச் சென்றது தப்பு என்று உமக்குப் படவில்லை யல்லவா!

முருகப்பன் செட்டியாரைக் காவல் வைத்துத் தானே சென்றேன் என்று புன்சிரிப்போடு வார்த்தை வந்தது.

அட சரிதானையா! பாலைக் காய்ச்சி பூனையைக் காவல் வைத்தது போல் ஆயிற்று கதை. நேற்று வந்து முளைத்தவர் நீர்! எமக்குத் தெரியாதா அவன் யோக்கியதாம்சம்! கன்னிப் பருவத்திலேயே முருகம்மையின் கற்பழித்த அக் காதகனை, விலக்கு வேலையை விட்டு என்று உன் மாமனிடம் எவ்வளவோ போராடினோம். அவன் பொருட்படுத்தினானா எங்கள் பொன்னான வார்த்தையை! இது ஊரறிந்த செய்தி. அதனால்தான் செல்வம் நிறைய இருந்தும், அவளை மணக்க எவரும் பின்வாங்கினர். வயது 21 ஆயிற்று. ஏமாந்த உமது தலையில் கட்டிவிட்டு, இங்கிருந்தால் செய்தி வெளிப்பட்டு விபரீதம் விளையலாம் என்று அஞ்சி, யாத்திரைப் போக்குக் காட்டிப் போயினான் உன் மாமன்; ஒரு மாதகாலம் உன்னை மறைத்து வைத்த கதையும், பிறகு அறிந்தோம். என்னமோ விவகாரம் ஒருவாறு தீர்ந்தது என்றிருந்தோம். நீயோ அவனையே காவல் வைத்துப் போயினை! நீ இல்லாத காலத்தில், அவர்களது கேளிக்கை யிருந்த வண்ணம் நினைத்தாலும் வயிறெரிகிறது. நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாமா என்று தோன்றுகிறது!

சோமேசர் மேலும் முருகம்மையார் மேலும் இருந்த வஞ்சம் தவிர்த்துக்கொள்ள, பாழும் பங்காளிகள் இங்ஙனம் படபடத்துப் பகர்ந்தனர்.

பல மலர் மணந்த வார்குழல்
கனவிலும் நனவிலும் மறவேனே

உள்ளம் உருகி முருகனை வழிபடும் அவள் மேலுமா இப்பழி! உடலாடியது; உள்ளம் துடித்தது; மீசை படபடத்தது; கொதித்தது மனம்.

உண்மைப் பக்தி யுடையவள் போல், கள்ளக் காதலன் பெயரை இடையறாது உரைத்து நடிக்கும் ஆஹா! அவள் ஜால வித்தை எப்படி உம்மையும் ஏய்த்திருக்கிறது?

சிவுக்கென் றெழுந்தார் செட்டியார். விறுவிறுத்த சினத்தோடு, எதிர் நின்ற இருவர் தாடையை, இடுப்பை, தனஞ்செயர் பாதமும் கைகளும் பதம் பார்த்தன.

அறையும் உதையும் வாங்கிய அவர்கள், அடி! உதை!! கொல்லு!!! உன் கையாலேயே சாகிறோம்!!!! இந்த அவமானம் எங்களால் தாங்க முடிவதில்லை யென்று, பொருந்த நடித்தனர் பொய்யர்கள்.

தனஞ்சயர் விரைந்து நடந்தார். மாளிகை யடைந்தார். முருக பஜனை நடத்திக் கொண்டிருக்கிறாள் முருகம்மை. அயர்ந்து நின்றார்; சிறிது சிரவணித்தார்.

முருகா முருகா என்பது கொண்டு குறைகூறுகிறார்கள் பாவி கள்: அதைத் தடுத்துவிட்டால், பிறகு என்ன குறை பிறக்கிறது பார்ப்போம் என்று உள்ளுணர்வு உணர்த்தியது.

எதிர் பாராத இடர்

விரைந்து மாளிகையின் உள் நுழைந்தார். கணவர் வருகை கண்டதும், மதி கண்ட கடல்போல் எழுந்த முருகம்மை, முகில் கண்ட மயில் போல் மகிழ்வால் உடல் ஆட எதிர்கொண்டு, வருக முருகா! எனைப் பிரிந்திருக்க உமக்கு எப்படி முருகா மனம் வந்தது என்று நெருங்கினள்; விரைத்து நின்றார் செட்டியார்.

இனி, யிந்த முருக முருக என்பதை விடு!

என் முருகா! நலம் தரும் விமல அந்நாமத்தை விடுவதா?

---

* யோகத்தைச் சேருமாறு மெய்ஞ் ஞானத்தைப் போதியாய்
இனி ஊனத்தைப் போடிடாது மயங்களாமோ

நன்மை தருமோ தாராதோ! என் கட்டளை ! இனி நீ முருகா என்று வாய் முனகுவதும் கூடாது.

சலித்த மனத்தொடு, சரிதான் முருகா என்று பதில் எழுந்தது.

பாளைக் கத்தியைத் தனஞ்சயர் பார்த்தார். இளநீர் சீவப் பயன் படும் அது, ஒரு மூலையி லிருந்தது; கடுத்த மனத்தொடு தாவி, அதை எடுத்தார்.

மற்று மொருதரம் முருகா என்பையேல், வெட்டிவிடுவேன் ஜாக்ரதை !

அகோர வீரபத்திரர்போல், உறுத்து நோக்கும் தன் கணவனது உக்ர கோலம் கண்டு, நடுங்கியது உடல்.

வாய் வழுவி வருகிறது வார்த்தை; கை குவித்துக் கும்பிடுகிறார்; இல்லை...யில்லை...இனி சொல்வதே யில்லை முருகா! என்னை மன்னித்து விடும்!

மறுபடியுமா என்ற உறுமலொடு, தலைமேலோங்கியது வாள்.

ஆ என்ற அலறல் !

வலப்புற முழங்கை துண்டிக்கப் பட்டு, நிலத்தில் விழுந்து துடிக்கிறது. உதிரம் புலபுல வென்று உதிர்கிறது; குருதிக் குளமாகியது நிலம்; வலி பொறுக்க முடியவில்லை; அழுது கதறுகின்றார் அம்மையார்.

யாது பிழை செய்தேன் முருகா யான்! கதறி வந்தது மொழி.

இந்நிலை தனஞ்சயனுக்கும் சகிக்க முடியவில்லை; கையறுபடக் காரணமான முருகனே கை தருவான் போ! என் எதிரில் நிற்காதே என்று வேறு திசை திரும்பினான்; அவனது படபடப்பு, இதய வெடிப்பாக விளையுமோ என இருந்தது.

அப்பாடியா என்ற அலறல்!

முருகா...முருகா...முருகா...என்று வீறிட்டுக் கூவி, வீழ்ந்து மூர்ச்சித்தார் முருகம்மை.

தீதல் ஒழிந்து மனது கசிந்துன்
இணையடி யென்று புகழ்வேனோ

அருள் உதயம்

முதல் தரம் முருகா என்ற போதே, மயில் மேல் முருகன் வந்தனன்.

அடுத்து முருகா என்றதும், அருந்த கரம் வளர்ந்தது.

மூன்றும் தடவையாக முருகா என்றதும், இதோ திருமுருகாற்றுப்படை! இதைப் பாராயணம் செய்தவர், எந்த இடையூறும் எய்தார் என்கிறான் இறைவன்.

எழுந்து விழுந்து வணங்கும் தன் தேவியை, எதிர் இருந்த கணவன் கண்டு வியந்தான்.

என் கணவர் நல்லவர். என் ஊழ் விளைத்த வினைவிது! அபராதம் பொறுத்து, அவர்க்கு உனது அருள் நோக்கம் நேர அருள்! மயிலேறும் பரமா! அயிலேந்தும் அத்தா! எனது ஆவி படர்தரு தெய்வமே என்று, இன்பக் கண்ணீரை அம்மையார் இறைவன் திருவடியில் இறைக்கின்றார்.

அம்மையின் வேண்டலுக்கு, இசைந்தான் எமது அமலன். அருள் நோக்கம் பாலித்தான். உள்ளக் கண் மலர்ந்தது. உமையாள் குமரன் தரிசன மாயினன்.

சேந்தா! குமரேசா / பேரருளே செய்கின்ற
ஏந்தால்! அறத்திற் கினியவனே!—வேந்தேமெய்
ஆவித் துணைநீ யறிந்தேன் அருளமலா!
பாவியிவன் உய்நெறியிற் பார்

என்று வாழ்த்துகிறது வாய்.

சண்முகன் உவந்தளித்த திருமுருகாற்றுப்படையை, இனிது பெற்றனர் இருவரும்; கந்தன் ஞானகாயத்திற் கலந்தான்; வீழ்ந்து வணங்கினர் தம்பதிகள்.

பாராயணம் செய்தனா. ஆயிரக்கணக்காக ஏடு எழுதுவாரை நியமித்து, திருமுருகாற்றுப்படையை பிரதி செய்தனர். தமிழ் நாடு முழுதும் பரப்பினர். பலகாலம் இப் பணியில் இருந்தனர்.

ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமானே
ஆதரத்தோ டாதரிக்க ஆனபுத்தி புகல்வாயே

அதன் பயனாக, பெருமான் முருகன் அடி நிழலில் இருக்கும் பேற்றைப் பெற்றனர்.

மலர் மழை பெய்தது. பூதேவியின் உடல் புளகித்தது.

முருகா ! அயில் முருகா என மொழியும் ஒரு மாதின்
ஒருகாதலன் அவன் கையினை உதிரம் பெருகரிகால்
அருளாலது வளரும்படி அயர் தண்ணளி யானா
மருமாலை கொள் மார்பா ! என மறவேல் என மறவேல்

என்று வீடு காடும் உளமுடையார், இன்றும் இவ்வரலாற்றைப் பாடுகின்றார்கள்.

Cosmos and Trees

This the tree of Moksha filled the imagination of Sukhabrahmam when he made his obeisance to the Lord Guha of Thiruthani—in other words the Lord that lives in the Shanthi of his devotees.

" ஏகம் பக்ஷத்வயம் சாக்ஷாத்
த்ரிமூர்த்திம் ச சதுஷ்பலம்.
பஞ்சஸ்கந்தம் ஷட்சாகம்
ஸப்தத்வக் பரிபூரிதம், அஷ்ட புஷ்பம்,
நவாக்ஷம், தசவ்யாப்தம் ஏவம் மஹாத்புதம்
ஆதி மஹாவ்ருக்ஷம் பாலயந்தம் குஹம்பஜே."

This the tree expression of the Virataswaroopam of the Divinity is reinforced in the puranic story of Sri Skanda, purporting to teach Valli, the Virataswaroopa of God by his "Leelas." The Lord once stood as a big tree before Sri Valli, The

---

கிங்கிணீமுக வித பதயுகமலர்
தந்த பேரருள் கனவிலு நனவிலு மறவேனே

'Vengai' Tree of the forest, Sri ***Kachiappa Sivachariar*** sang.

> " ஆங்கது காலை தன்னில் அடிமுதல் மறைகளாக
> ஓங்கிய நடுவணெல்லாம் உயர் சிவ நூலதாக
> பாங்கமர் கவடு முற்றும் பல்கலையாகத் தானோர்
> வேங்கையின் உருவமாகி வேற்படை வீரன் நின்றான் "

The Lord stood. A huge tree he looked. The roots represented the quintessence of the Vedas—the Scriptures. The trunk was built of the rich and ripe experiences of the devotees—recorded in the sacred books about God and His manifestation, (சிவ நூல்கள்), The branches constituted the Sixty-four Kalas or Sciences, the leaves as they rustled brought forth the divine outpourings of the Saints., the flowers on the tree showered the budding fragrance of the unfolding Gnana of the Mumukshus or the seekers after Godhead. The fruits represented the mukthi or salvaton for the seeker.

Such trees are found in abundance in Pazhamuthirshola (பழமுதிர் சோலை) of Skanda's- devotees and the Malirunjolai (மாலிருஞ் சோலை) of Krishna's devotees.

Avadai-Akkal, one of the recent great lady-devotees of the Thirunelvely district pictured men as struggling in the ocean of Samsara and attempting to be saved by clucthing one of the descending branches of this great tree. From the boughs thereof men seek to ascend to the branches, ascending further next to the trunk,

ultimately seeking to reach the roots of Vedanta on which the tree stands, hanging downwards towards the earth from its heavenly roots of mercy. She sang :—

> "மரமேறி கைவிட்ட மானிடர் போலே
> நான் மாண்டு பிறவாமல் நாதா
> பரமெனக் கீந்திடும் தேவரீரல்லவோ
> சின்மயனே குருநாதா"

When the late great Bharathiar received initiation into the Divine Truth at the hands of a "Paradesi", a wandering hermit reputed to be Sri Agastiar, what did he declare! He was shown the Sun at the top of the sky; he saw; he realised the effulgent Brahmam, the God of the universe. He was shown the reflection of that Sun in a dilapidated, half ruined well. He understood that dishevelled and distortioned as his body was, the reflection of God was to be found within himself. He was shown a mud-wall mouldering to ruin, the only remains of a destroyed house.

He realised that the body that he called his own was no better than the falling mud wall before him and was liable to destruction at any moment. He said to himself that standing at the edge of destruction of an unstable body, he has been vouchsafed the sight of the glorious effulgence of an eternal existence, and what is more, the presence of that effulgence within himself. He poured forth in song.

"வேதாந்த மரத்தினில் ஓர் வேரைக் கண்டேன்."

'I have seen just one root of the big tree of Vedanta,'

The tree of which Bharathiar saw the root, that tree is the 'Venga' tree of Sri Valli, the Vriksham of Sukha and of Avadai Akkal and the Asvatta tree of the Geetha.

The great Bhaktha Prahlada explained Sri Narayana to his friends, other lads of the same age like himself, in the immortal words pictured by *Kambar*.

"கொம்போடடை பூ கனி காயெனினும்
வம்போ மரம் ஒன்று எனும் வாசகமே."

'Though the parts of a tree are very contrarient to each other, the truth holds fast that the tree is a unit. The world may be full of differences and varieties; but the Lord who permeates the world is one and so you and I have to understand our Narayana', so said Sri Prahlada.

Even so the great Pattinathar likened Lord Shiva to a Sugarcane plant. It is an embodiment of Siva-Vruksha.

"கண்டம் கரியதாம் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல அழகியதாம்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கும் ஓங்கு புகழ் ஒற்றிக்
கடலருகே நிற்கும் கரும்பு.

The tree is an unfailing remembrancer of the Cosmic unity. Cosmos is a tree. It is made of various contrarient parts. But these converge into one unity which permeates the whole of it and all parts of it; that is, the One Lord of the universe by whatever name man may worship. That entity has many names and many forms. But worshipped under any name or form, the blessing entity is One and only One, whose inexhaustible and everexpanding grace the lovers of Truth and God have tasted and experienced on this earth.

—*Thiruppugal Mani*

155

விதியையும் விதித்து, என்னை விதித்திட்ட
மதியையும் விதித்து, அம்மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி! நின் அருள்
கதியை எப்படிக் கண்டு களிப்பதே!

—தாயுமானர்

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S IYER LIBRARY
BESANT NAGAR :: MADRAS-90.

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

gd. No. M.5390. Amirthavachani (1952 ஆ...

156

ஷண்முகம் பிரா...

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்
நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்
புரொப்ரைட்டர்:
சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்
"ஸ்வர்ண மாளிகை"
A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel:—"FAITH' Estd:—1924 Phone:—113

வியாபாரக்குறி
N. K. M.
தங்கநாடா



நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53, கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
... S. Muthu... 54, Bunder St. Madras